முரசொலி

வார இதழ்

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு 4 || 7—6—57 வெள்ளி ஒலி 7

நிமிர்த்தப் பார்க்கிறார்கள்!

காங்கிரசைச் சீர்திருத்துவதற்கு வழிகள் தேடி முடிவெடுத்தது டில்லியில் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி.

[ராகுல சாங்கிருத்தியாயன் அவர்கள் எழுதிய “பொது உடமைதான் என்ன?” என்ற நூலிலிருந்து ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது; பழமை விரும்பிகள் தெளிவடைவதற்காக!]

பின்னேற்றம் சாத்தியமா?

“இக்காலத்தில் ஒவ்வொரு கிராமமும் ஒரு தனி உலகமாயிருந்தது. தச்சன், கொல்லன், சேணியன், உழவன் எல்லோரும் அனுதாபத்தோடு ஒத்துழைத்துச் சுதந்திரத்தோடு வேலை செய்தார்கள். பசுமை நிறைந்த நிலங்களாலும், குளிர் தரும் தோட்டங்களாலும் சூழப்பட்டு, இயற்கையின் மடியல் மகிழ்ச்சியோடும், அமைதியோடும் வாழ்க்கை நடத்தினார்கள். அவர்களின் பக்கத்துத் தபோ வனங்களில் ரிஷிகளும், மகாத்மாக்களும் அமைதியான ஆசிரமத்திலே, தங்களது அத்யாத்மீக ஆனந்தத்திலும், அன்பு வெள்ளத்திலும் மனிதர்களை மட்டுமல்ல—மற்ற உயிர்களையும்கூட மூழ்கச் செய்து கொண்டிருந்தார்கள். இந்த இயந்திரங்களின் காரணமாய் நமது அந்தத் தங்க உலகம்—அந்தச் சத்திய யுகம்போய் விட்டது. வாருங்கள்; நாம் மறுபடியும் அங்கே போய்ச் சேருவோம்” என்று சொல்லுகிறார்கள். ஆயினும் அந்தப் பொன்னுலகின் செயலான பிரமிட், சாய்ந்த கோபுரங்கள், சீனாவின் நெடுஞ்சுவர் இவைகளின் சரித்திரத்தைப்படிப்பவர்கள், மேலே கூறப்பட்ட நயத்தோடு கூடிய—மனதிற்கினிய சித்திரத்தின் முக்கால் பாகம் பொய் என்பதைத் தெரிந்து கொள்ளுவார்கள். அந்த அடிமைப் பழக்க மிகுந்த காலத்தில் மனிதர்களின் விலை மதிப்பு, இந்தக் “கோர கலியுக”த்திலுள்ள அளவுகூடக் கிடையாது. ஆனாலும், கொஞ்ச நேரத்திற்கு நாம் அந்தச் சித்திரத்தை உண்மையானதென்றே வைத்துக் கொள்வோம். நாம் 2000—3000 வருடங்களுக்கு முந்திய காலத்திற்குத் திரும்பிப் போக முடிந்தால், இயந்திரங்களின் பெருக்கம், அவற்றின் வளர்ச்சி—இவைகளினால் தோன்றிய கஷ்டங்களைப் போக்கிவிட முடியும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நமக்குப் பின்னால் திரும்பிப்போக உரிமை இருக்கிறதா? இயந்திரங்களின் தோற்றம், ஒரு மனிதனுடைய ஒரு மணிநேர மூளைப் போராட்டத்தின் பலனா? அதனுடைய ஆரம்பம் மிகப் பழைய காலம். நான்கு கால் பிராணி தனது நான்கு கால்களுடைய வேலைகளையும் பின்னங்கால் இரண்டினிடமும் ஒப்புவித்து, முன் கால் இரண்டையும் பூமியிலிருந்து விடுதலை பெறச் செய்து, இரண்டு கால் பிராணியாக மாறிய அன்றிலிருந்தே, இயந்திர நாகரீகம் ஆரம்பமாகியது. முன் கால் இரண்டினாலும் தடியையும், கல்லையும் எறிய ஆரம்பித்த அன்றே வளர்ச்சிப் படலம் துவங்கிவிட்டது. மனிதன் மனிதத் தன்மையைப் பெற்றதிலிருந்து இயந்திரப் பிராணியாகவே இருந்து வந்திருக்கிறான். வேறுபாடு இயந்திரத்தின் அளவில்தான். நமது நண்பர்கள், இயந்திர வளர்ச்சியின் முற்பாகத்தை நினைவு கூற மறுக்கிறார்கள். கையால் நடத்தப்படும் குயவன் சக்கரம், ராட்டை, ஏற்றம், வண்டி இவைகளெல்லாம் இயந்திரங்கள்தான் என்று நினைக்கவே மறுக்கிறார்கள். நீராவி, எண்ணெய், மின்சாரம் இவைகளால் நடத்தப்படுபவைகள்தான் இயந்திரம் என்று நினைக்கிறார்கள். வியவகார ரீதியாகப் பார்த்தால் இதில் ஒன்றும் குற்றமில்லை. தற்காலப் பயங்கரமான நிலைமையைத் தோற்றுவித்ததற்கு முக்கிய காரணமான நீராவி, எண்ணெய், மின்சாரம் இவைகளினால் இயக்கப்படும் இயந்திரங்களை இந்த உலகத்திலிருந்து போக்கிவிட முடியுமா? இந்த இயந்திரங்கள் அறிஞர்களின் மூளையிலிருந்து தோன்றியவைகள். அந்த அறிஞர்கள் எப்படிப் பட்டவர்கள்? தங்கள் வாழ்நாள் முழுவதும் களைப்படையாமல் உழைத்து, இயற்கையின் ஏதேனும் ஒரு இரகசியத்தைக் கண்டு பிடித்துவிட்டால், அதைவிடத் தங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடியது உலகத்தில் வேறொன்றுமில்லை என்று நினைப்பார்கள். அவர்களின் ஆராய்ச்சி தவறானதென்று உங்களால் கருதப்பட்டால், உங்களுடைய உத்தரவினால் அவர்கள் நெருப்பின் கொடிய ஜ்வாலையில் எரியப்படவும், சக்கரத்திலிட்டுப் பிழியப்படவும், 2000 வருடங்களுக்கு முன்போலவே இன்றும் மகிழ்ச்சியோடு தயாராயிருப்பார்கள். இந்தத் தகராறு மூளை அதாவது சைத்தானின் தொழிற்சாலை இருக்கும் வரை, இயந்திரங்களின் அடிப்படையை எப்படி நசுக்க முடியும்? நீங்கள் நினைக்கிறபடி, பின்னால் திரும்பிப் போவது அவ்வளவு சுலபம் அல்ல என்பது இப்பொழுது தெரிகிறது. இதற்காக, மனிதர்களில் உயர்ந்த மூளையுடையவர்களைக் கொன்று குவிக்க வேண்டும். அப்படிச் செய்ய, அமைதியின் பக்தர்களும் — சத்திய யுகப் பிரயாணிகளுமான நமது நண்பர்கள் விரும்பமாட்டார்களே!

* * *

நீங்கள் சொல்வதைப் போல அந்தச் சத்திய உலகத்திற்குத் திரும்பிச் செல்வதில் வெற்றி பெற்றால், இயந்திரங்களால் ஏற்பட்டுள்ள வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினை ஓர் அளவு தீர்க்கப்படும். ஆனால் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு மக்கள் பெருக்கம் என்ற மற்றொரு பெரிய காரணமிருக்கிறது. உலகத்தில் சில தொழில் வளர்ச்சியுள்ள நாடுகளைத் தவிர்த்து மற்ற எல்லா நாடுகளிலும் மக்கள் எண்ணிக்கை பெரிய அளவில் அதிகப்பட்டுக் கொண்டு வந்திருக்கிறது. 1931-ம் வருட மக்கள் கணிதப்படி, சென்ற 10 வருடத்தில் இந்தியாவில் மட்டும் 3 கோடி மக்கள் அதிகப் பட்டிருக்கிறார்கள். ஐக்கிய மாகாணத்திலும் பீகாரிலும் அநேக ஜில்லாக்களில் ஒரு மனிதனுக்குக் கால் ஏக்கர் விகிதம்கூடப் பயிரிடும் நிலம் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. அங்கே புதிய நிலங்களை உற்பத்தி செய்வதற்குக் காடுகளோ—தரிசு நிலங்களோ கிடையாது. பீகாரின் சாரான் ஜில்லாவிலும், ஐக்கிய மாகாணத்தில் கோரக்பூர் ஜில்லாவிலும், ஒரு மனிதனுக்கு 1–5 ஏக்கர் விகிதம்கூடப் பயிர் நிலம் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. அந்த ஜில்லாக்களின் லட்சக் கணக்கான மனிதர்கள், கல்கத்தா முதலிய நகரங்களுக்குச் சென்று தொழிற்சாலையில் வேலை செய்கிறார்கள். அப்படி இருந்தும் அங்குள்ள ஏழ்மையை எழுத்தில் எழுத முடியாது. உங்களுடைய சத்திய யுகத்திலும் உணவு, உடை பெறுவதற்கு ஒரு மனிதனுக்கு 2 ஏக்கர் விகிதம் பயிர் நிலம் வேண்டும். மேய்ச்சல் தரிசு, ரிஷிகளுக்கு ஆசிரமம் முதலியவைகளுக்கு ஏற்பாடு செய்யும்பொழுது இன்னும் அதிகமான நிலம் வேண்டும். இந்த நிலத்தை எங்கிருந்து கொண்டு வர முடியும்? சாரான் ஜில்லாவின் 24 லக்ஷம் மக்களை 5 லக்ஷமாகக் குறைக்க முடியுமா? நீங்கள் கர்ப்பத்தடையை ஆதரிக்க மாட்டீர்கள், ஹிம்சையின் வழியை ஒரு நாளும் ஏற்றுக்கொள்ளவும் மாட்டீர்கள். ஒருக்கால் நீங்கள் உங்களுடைய மனதை ஒரு முறை கல்லாக ஆக்கிக் கொண்டு, அந்த மக்களை 5 லட்சத்திற்குக் குறைத்து விட்டாலும், மறுபடியும் 4, 5 தலை முறைகளில் வளர்ந்து அதே எண்ணிக்கைக்கு வந்து விடுமே! மக்கள் பெருக்கத்தைத் தடுப்பதில், தொழிற்சாலைகளின் வளர்ச்சி ஓரளவு உதவி செய்யும். இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய இயந்திர வளர்ச்சியுள்ள நாடுகளில் மக்கட் பெருக்கம் தடைப்பட்டு விட்டது. கர்ப்பத் தடையையும், இயந்திர வளர்ச்சியையும் ஏற்றுக்கொள்ளும் பொது உடைமைக் கொள்கைக்காரர்கள் இதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் பின்னே திரும்பிச் செல்ல விரும்பும் சத்திய யுகவாதிகள் இதைத் தீர்க்க முடியுமா? அவர்களுடைய புலனடக்கமும், பிரமச்சரியமும் சில பேருக்கு உபயோகமாயிருக்கலாம். ஆனால் அவைகள் சமுதாயத்தில் ஏமாற்றத்தையும், இரகசியக் குற்றங்களையும் நிச்சயம் தோற்றுவித்து விடும் என்பதில் சந்தேகமில்லை.

அவர்கள், “நாங்கள் கொஞ்சம் செய்கிறோம்; பாக்கியைக் கடவுள் கவனித்துக் கொள்ளுவார்” என்று சொல்லக்கூடும். நாங்கள் சொல்கிறோம்: “இல்லை ஐயா. நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம். எல்லாவற்றையும் கடவுளிடமே விட்டுவிடுங்கள். பொது உடைமைக் கொள்கைக்காரர்கள் செய்வதெல்லாம், கடவுளின் செயல்தான் என்று உங்கள் மனதிற்கு உணர்த்துங்கள்” என்று.

இப்போது, பின்னோக்கி ஓடுவதென்பது நம்மால் ஆகக்கூடாத காரியம் என்று நன்கு தெரிகிறது. நமது பிரச்சினைகளை நாம் முன்னேறித்தான் எதிர்க்க வேண்டும்.

★★★

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியில்
மற்றுமோர் பதிய சட்டம்—பொன்னான வாய்ப்பு
‘ஹோம்லண்ட்’
தாயகத்தின் எழிலும் வளமும், வாழ்வும் பண்பும், உரிமையும் சுதந்திரமும், வடநாட்டு எத்தரால் கொள்ளையிடப்படும் கொடுமையை உலகுக்கு உணர்த்த—உற்றாராம் ஆந்திர, கன்னட, கேரள சோதரர்களுக்கு அறிவுறுத்த
‘ஹோம்லண்ட்’
★
அண்ணா
அவர்களை
ஆசிரியராகக்கொண்டு
9-6-57 முதல் வெளிவருகிறது

வெள்ளி 7—6—57 சென்னை

தியாகம்!

இந்த நாட்டிலே வாழ்பவர்களில் பெரும் பகுதியினர் ஒரு நாளைக்கு ஒருவேளைகூட சரியாகச் சாப்பிடுவதில்லை.

பட்டினி கிடப்பவர்கள்; பஞ்சத்தாலடிபட்ட நிலைமையிலிருப்பவர்கள்—இவர்கள்தான் பெரும்பான்மையோர்!

மரணத்தோடு போராடிக் கொண்டிருப்பவர்களும்; அரைப் பட்டினியுடன் அணு அணுவாய்ச் செத்துக் கொண்டிருப்பவர்களும் தான் இன்று காங்கிரஸ் அரசாங்கம் ஆண்டு வருகின்ற பிரஜைகளாகும்!

அவர்களைப் பார்த்துத்தான் பண்டித நேரு அடிக்கடி அறைகூவல் விடுக்கிறார்—திட்டத்தின் வெற்றிக்காக நீங்களெல்லாம் தியாகம் செய்யவேண்டுமென்று!

"அரைப் பட்டினி கிடப்பவர்களே! இனிமேல் நீங்கள் உங்கள் சாப்பாட்டை விட்டுக் கொடுத்து; முழுப் பட்டினிக் கிடந்து, திட்டத்தின் வெற்றிக்கு உங்களால் ஆன தியாகத்தைச் செய்து உதவுங்கள்!" —வேண்டினார்கள் வீராதி வீரர்கள்!

"முழுப் பட்டினி கிடப்பவர்களே! நீங்கள் சீக்கிரம் செத்து சுடுகாடு போய்ச் சேருங்கள்; உணவருந்துபவர்களின் எண்ணிக்கையில் ஒருவரைக் குறையுங்கள். அந்த அளவிலாவது தியாகம் புரிந்து; திட்டத்தின் வெற்றிக்குப் பாடுபடுங்கள்!'—இப்படிக்கூட நினைத்தார்கள், அது தினமும் 'திட்டம்-திட்டம்' என்றே எண்ணி உருகிக் கொண்டிருப்பதாக நடிப்பவர்கள்!

தாய்மார்களைப் பார்த்து நகைகளைக் கேட்டார்கள்; வளையல்களைக் கொடுத்தால்கூடப் போதுமானது என்று கெஞ்சினார்கள்; ஒரு அமைச்சர் அதிகப் பிரசங்கித்தனமாய் பெண்களின் தாலியைக்கூட கேட்டு வைத்தார்!

அந்த அளவுக்குத் திட்டத்தை வெற்றியாக்க மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் கனம்கள் முயற்சித்து வந்தார்கள்!

எந்த ஒரு செயலும் திட்டத்தோடு சம்மந்தப்படுத்தப்பட்டது. வரிகளை உயர்த்துவதும்; ஏழைகளின் வயிற்றிலடிப்பதுங்கூட திட்டத்திற்காகத்தான் என்று பேசினார்கள்!

சமீபத்தில்கூட பண்டித நேரு ஜூன் 2-ம் தேதியன்று புதுடில்லியில் நடைபெற்ற காங்கிரஸ் காரியக் கமிட்டியிலே பொருளாதார நிலை பற்றியத் தீர்மானம் வரும்போது பேசினார்:

"இதுவரையில் வேறு யாராவது சுமையைத் தாங்க வேண்டுமென்றும்; திட்டத்தின் பலன் எல்லோருக்கும் வரவேண்டுமென்றும் பொதுவான எண்ணம் இருந்து வந்தது. ஆனால் சுமையை நம்மில் ஒவ்வொருவரும் பகிர்ந்துகொள்ள வேண்டுமென்பதை இப்போது தான் முதன் முதலாக உணரத் தொடங்கி யிருக்கிறோம்!"

—பண்டிதரின் பேச்சு இது!

சுமையை எல்லோரும்—எல்லா மக்களும்—பகிர்ந்துகொள்ள வேண்டுமென்கிறார்!

அழகான தத்துவம்' எல்லோரும் தோள் கொடுத்தால்தான் பளு குறைந்ததுபோல் தோன்றும்; காரியமும் எளிதில் கைகூடும்! உண்மைதான்! ஆனால் சுமையைப் பகிர்ந்து கொள்வதற்கு எல்லோரும் முன்வந்திருக்கிறார்களா?

அதுதான் இல்லை.

சுமையை எல்லோரும் பகிர்ந்துகொள்ள வேண்டுமென்று கூறிய அதே தினத்தில்—அதே இடத்தில்தான் மந்திரிமார்களாகிய நாங்கள் சுமையைத் தூக்கமாட்டோம்; நாங்கள் பல்லக்கில் ஏறிக் கொண்டுதான் வருவோம்; சுமக்கவேண்டியது நீங்கள்தான்; என்னும் பொருள்படும் விதத்திலே பண்டிதர் பேருரை ஆற்றியிருக்கிறார்!

அன்றைய தினம் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த பனாரசி தாஸ் 'என்பவர் மகாத்மா காந்தியின் விருப்பப்படியும்; கராச்சி காங்கிரஸ் தீர்மானப்படியும் காங்கிரஸ் அமைச்சர்களின் சம்பளம் 500 ரூபாய்தான் இருக்க வேண்டுமென்றும்; எனினும் காலப்போக்கை அனுசரித்து இனிமேல் காங்கிரஸ்காரர்கள் 1000 ரூபாய்க்குமேல் சம்பளம் பெறக்கூடாது என்றும் தீர்மானம் கொண்டு வந்தார்.

அப்போது எழுந்த விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசிய பண்டிதர் மந்திரி இனத்தைச் சேர்ந்த தாங்கள், தங்களது சம்பளத்தில் எந்த ஒரு பைசாவையும் விட்டுக்கொடுக்க முடியாது என்கிற விதத்திலே பேருரையாற்றி யிருக்கிறார்!

கராச்சியிலே தீர்மானம் போட்ட நேரம் ரூ. 500 என்பது இப்போது ரூ. 2000-க்குச் சமமென்று சீறினாராம், ஆசியாவின் ஜோதி!

தனக்கே தன்னுடைய சம்பளம் போதவில்லையென்றும்; தனது புத்தகங்கள் விற்பனையாவதன் மூலம் தனக்குக் கிடைத்து வரும் 'ராயல்ட்டி' வருமானம்தான் தனக்குக் கட்டி வருகிறதென்றும் அவர் பேசியிருக்கிறார்!

'ராயல்ட்டி' தொகை வருமானம் வருவதால் பண்டிதருக்குக் கட்டி வருகிறதாம்!

ஆனால் பண்டிதரின் ஆட்சியின் கீழ் வாழும் அத்தனை கோடி பிரஜைகளுமா புத்தகம் எழுதி; 'ராயல்ட்டி' தொகை பெற்று வாழ்கிறார்கள்?

அல்லவே! அரை வயிற்றை நிறப்புவதற்குக்கூட வகையற்றுத் திண்டாடும் அவர்கள் அத்யாவசியமாக வாங்கி உபயோகிக்கும் அத்தனை பண்டங்கள் மீதும் வரி விதித்து; ஐந்தாண்டுத் திட்டத்தின் வெற்றிக்காகத் தியாகம் செய்யுங்கள்—என்று இதோபதேசம் செய்யும் பண்டிதர் நூற்றுக் கணக்கில் தொகை வாங்கும் மந்திரிகளது சம்பளத்தைக் குறைப்பதற்கு மறுப்பது ஏன்?

தாய்மார்களைப் பார்த்து; தாலியிலேயிருக்கிற தங்கத்தைச் சுரண்டிக் கொடு என்பவர்கள் அதே திட்டத்தின் வெற்றிக்காகத் தங்கள் சம்பளத்தில் சில நூறு ரூபாய்களைக் குறைத்துக்கொண்டால் என்ன கேடு வந்து சேர்ந்துவிடும்?

ஏழைகள் வரி கொடுப்பது; வருமானத்தை இழப்பது-இவை திட்டத்தின் வெற்றிக்காக அவர்கள் செய்யவேண்டிய தியாகமாம்!

ஆனால் அதே நேரம் மந்திரிமார்கள் மட்டும் தங்கள் சம்பளத்தில் சில நூறுகளைத் துறக்கும் தியாகத்தினைச் செய்யமாட்டார்களாம்!

பக்கத்திலேயுள்ள கேரளத்தில் மந்திரிகள் 500 ரூபாய் சம்பளத்தில் வாழ்கிறார்கள். ஆனால் இங்குள்ள மந்திரிகளோ தங்கள் சம்பளத்தை 500 ஆக அல்ல; 1000 ரூபாயாகக்கூடக் குறைத்துக்கொள்ள மாட்டார்களாம்!

—கடைந்தெடுத்த சோஷலிஸ்ட்டாம் பண்டித நேருவே இந்தப் பிற்போக்கு வாதத்திற்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசுகிறார்!

பிறகு அதே நாக்கோடுதான் பொதுமக்களைத் தியாகம் செய்யச் சொல்லி உபதேசமும் புரிகிறார்!

தங்களுக்கு ஒன்று; பிறருக்கு ஒன்று—என இருக்கும் இவர்கள் அதிகாரம் இன்னும் எத்தனை நாட்களுக்குத் தானோ? ஃ



நிதி மந்திரி டி. டி. கே. தம்முடைய பட்ஜெட்டின் அருமை பெருமைகளை "மக்களுக்கு" முன்னால் அற்புதமாக எடுத்துச் சொல்லுகிறார் என்று "கல்கி" இவ்விதம் சித்தரிக்கிறது.

மறைக்கிழன்றமிலை!

"எதிரிகளைப் பிளந்து ஒரு பிரிவைக் கொண்டு மற்றொரு பிரிவை ஒழிப்பது - கண்ணீர்த் துளி அண்ணாத்துரை முதலியார் படும்பாடு இதுதான். இவர் நிலை சீக்கிரம் அம்பலமாகும். முதலியார் அவர்கள் கம்பராமாயணம் பிரசங்கம் செய்யும் நாளை எதிர் பார்க்கலாம். சி. ஆர். தலைமையில் மயிலாப்பூர் குளக்கரையில் சீக்கிரம் நடக்கும். ராமாயணத்தின் பாடமே எதிரிகளைப் பிளந்து ஒரு கூட்டத்தை விபீஷணராக்கி மற்றதை ஒழிப்பது தானே!"

மேலே கண்டது போன்ற வாசகங்கள், எங்கேயாவது இடிந்த சுவற்றில் கரியால் கிறுக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறீர்களா? இல்லை; இல்லை! பிறகென்ன; முற்றிப் போன மூளை குழப்பக்காரன் மூலை முடுக்குகளில் நின்று இது போலப் பிதற்றித் திரிகிறான் என்று எண்ணுகிறீர்களா? ஆமாம்; எண்ணத்தான் தோன்றும்! சரியான சித்தசுவாதீனத்தில் உள்ள யாரும் மேற்கண்டவாறு கற்பனை செய்ய முடியாது. துணிகளைக் கிழித்துக் கொண்டு, முகத்திலே கரிபூசிக் கொண்டு, குப்பைத் தொட்டி மூடியை எடுத்து குல்லாய் போலக் கவிழ்த்துக் கொண்டு, குட்டிக் கரணம்—கோவிந்த ராம சங்கீர்த்தனம் போட்டுக் கொண்டு தெருவிலே அலையும் தெளியவே முடியாத 'தேஜஸ்'கள்தான் "அண்ணாத்துரை முதலியார் கம்பராமாயணப் பிரசங்கம் புரியும் நாளை எதிர் பாருங்கள்" என்று பிதற்றித் திரிய முடியும்.

ஆனால்...இந்த மேலான கண்டு பிடிப்பை வெளியிட்டவர் சாதாரணமானவர் அல்லவாம்! வேதாசலம் பிள்ளை யென்று கேள்விப்பட்டிருப்பீர்களே! தெரியவில்லையா? திருச்சி தென்னூரில் ஒரு வக்கீல் இருக்கிறார். சிகப்புக் கடுக்கன் மின்னுகின்ற செவிபடைத்த புரட்சித் திராவிடர்! போராட்டமென்றால் தலை கொடுக்கத் தயார் என்று கூறி வீட்டுக் கதவைத் தாள் போட்டுக் கொண்டு மூச்சுவிடுவதுகூட வெளியில் தெரியாமல் முடங்கிக் கொள்ளும் முதல்வர்!

"என்ன வக்கீல் அய்யா! பெரியார் போராட்டம் ஆரம்பிச்சிருக்கார் போலிருக்கே!"

"ஆமாம்—ஆமாம்—அந்தக் கிழவன் வேற உயிரை வாங்குறார்!...ஜாதி ஒழிப்பாம், சனியன் ஒழிப்பாம்! நான் சொல்றேன் தருமு; ஆயிரம் நாய்க்கர் தோன்றினாலும் சரி; ஜாதி ஒழியவே ஒழியாது!"

"அப்படியா? என்ன நீங்களே இப்படிச் சொல்றீங்க?... திருச்சிக்கே பெரியார் நீங்கதான்னு சொல்ராங்க!"

"யாரு? நானா பெரியாரு? என்னமோ அவரும் நிரந்தரத் தலைவரு—நானும் நிரந்தரத் தலைவரு—அந்த அளவிலே வேணும்னா என்னைப் பெரியார்னு சொல்லலாம்—வேற அந்தக் கிழவனுக்கும் நமக்கும் எதிலியும் ஒத்துவராதுப்பா!"

"இப்ப எங்க பயணம் வக்கிலய்யா?"

"முக்குலத்தோர் சங்கத்துக்குப் போறேன்"

"சரி; சரி; போய் வாங்க! ஜாதி ஒழிக!"

—இதுபோன்ற உரையாடல் அவருக்கும், அவரது எதிர்க்கட்சிக்காரர்களுக்கும் கூட அடிக்கடி நடைபெறும். தான் தலைவராக இருக்கும் சொந்தக் கட்சியின்மீது வேதாசலம் பிள்ளைக்கு அவ்வளவு மதிப்பு—மரியாதை எல்லாம்!

"என்னமோ; ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை மாதிரி அந்த ஆள் கிடைச்சார்! எனக்கிட்ட இருக்கிற பசங்களில் அந்த ஆள் ஒருத்தர்தான் கொஞ்சம் நாணயமானவர்—நம்பிக்கையானவர்—எது செய்தாலும், எது சொன்னாலும் 'ஆமாம்' போடுவார். அவரை விட்டா எனக்கு ஆளும் கிடையாது! வேற யார் இருக்கா எனக்கிட்டே? அந்தக் கண்ணீர்த் துளிகள்தான் ஓடிட்டானுங்க! மிச்சம் இருக்கிறதே இரண்டுபட்டதாரிகள்; என் பணத்தால் படிச்ச பசங்க! அதனால் செஞ்சோற்றுக் கடன் கழிக்கிறானுங்க! ஒரு பெரிய பட்டதாரி மாதா மாதம் சம்பளத்தை எண்ணுவதிலும், காமராஜ நாடாருக்கிட்ட எனக்கிருக்கிற செல்வாக்கை உபயோகப்படுத்துவதிலும் நப்பாசை வச்சுக்கிட்டு இங்க சுத்திகிட்டு இருக்கிறான். அவனும் ஏதோ ஐந்தாண்டு திட்டம்—அது இது; அப்படி இப்படின்னு அப்ளிகேஷன் எல்லாம் போட்டுகிட்டுத் திரியறதா கேள்வி! வேற எவன் யோக்கியன்? ஸ்ரீரங்கத்திலே வாசுதேவ அய்யங்காரை தேர்தலில் ஆதரிக்கணும்னு சொன்னேன்—உடனே அந்த நடிகன், பேச்சாளன் எல்லாம் எனக்கிட்ட முரண்டிகிட்டு, எனக்கு எதிர் மேடை போட்டு சுயேச்சையா நின்ற தமிழனை ஆதரித்துப் பேசுறானுங்க! என்ன வெங்காயம்; கட்டுப்பாடு வாழுது! இவனுகளுக்கெல்லாம் வேதாசலம் பிள்ளை எவ்வளவோ உயர்ந்தவர்! போராட்டம்—ஜெயில்—அப்படின்னா ஒதுங்கிடுவாரு; அவர் உடம்புக்கு அதெல்லாம் ஒத்துக்காது! அவர் பேராலே எத்தனையோ அறிக்கை—அவருக்கே பிடிக்காத அறிக்கையெல்லாம் 'விடுதலை'யிலே போடுறேன்; வாயைத் திறப்பாரா மனுஷன்!"

—இப்படிப்பட்ட மதிப்புரையை இந்து பகுத்தறிவு வாதியாம் சுயமரியாதைப் பெருஞ்சுடர் பெரியார் அவர்களிடம் (பத்திரங்களில் மட்டும் ராமசாமி நாயக்கர்) பெற்றிருக்கிற பெம்மான்—தோடுடைய செவியன்—டி. பி. அவர்கள் (டி. பி என்பது நோயைக் குறிக்காது) அறிஞர் அண்ணா கம்பராமாயணக் காலட்சேபம் நடத்தப் போகிறார் என்று அறிக்கை விடுகிறார்; அழகு தமிழ்(?) ஏடாம் விடுதலையில்!

காஞ்சிபுரம் மாநாட்டில் காங்கிரசை ஒழிப்பேன் என்று கனல் கக்கி விட்டு, அதற்காகவே உழைக்கிறேன் என்று முப்பதாண்டு காலம் ஊர் பல சுற்றி முழக்கமிட்டுவிட்டு, சென்ற தேர்தலில் காங்கிரஸ் பாம்பை அடிக்கக் கம்யூனிஸ்டு தடியைப் பிடித்திருக்கிறேன் என விளக்க முரைத்துவிட்டு, கடைசியில் காமராசரிலிருந்து கடைந்தெடுத்த பார்ப்பனக் காங்கிரஸ்காரர்கள் வரையிலே ஆதரிக்கப்பட வேண்டியவர்கள்தான் என்று பறை கொண்டு கொட்டி "நிறை பை பை!" என்று நீர்க்குமிழியன்ன சொற்களை இரைத்துக் கூட்டங்கள் நடத்தி கழகத்தை "ஒலி பெருக்கிக் கடை" போல ஆக்கிவிட்ட பெரியாரின் அடுத்த பெரியாரே! வாசுதேவ அய்யங்கார் வழங்கிய காணிக்கை செலவழிவதற்கு முன்பே "நாங்கள் பிராமண எதிரிகள்!" எனக் கூவிக்கொண்டு களம் புகுந்த நோக்கத்தை விரித்துரைக்க அஞ்சி, விவேகபுரிப் பாதையிலிருந்து நழுவி; காஞ்சி நோக்கிக் கணை தொடுக்கும் மர்மந்தான் ஏதோ?

அண்ணா கம்ப ராமாயணப் பிரசங்கம் செய்வாரோ?

எத்தனை நடுங்காத நாக்கையா உமக்கு? கம்ப ராமாயணத்தைக் கொளுத்த வேண்டுமென அறிக்கை விடுத்து, சீறி வந்த எதிர்ப்பு கண்டு சிந்தை நொந்து பெரியார் வீற்றிருந்த நேரம்—சேதுப்பிள்ளைகளை, பாரதியார்களை சொற்போர்க்களத்தில் சந்தித்து அறிஞர் அண்ணா வாகை சூடிய நேரத்தில்; அய்யன்மீர்! தாங்கள் பெரியாரிடம் ராமாயணத்தைக் கொளுத்த வேண்டாமெனச் சிபாரிசு செய்ததை மறந்தீரோ?

சர் சண்முகத்திடமிருந்து வந்த அந்தரங்கத் தந்தி சேலத்

❋ 9-ம் பக்கம் பார்க்க

26—5—57 அன்று கொடவாசல் 'பாரத் சேவக் சமாஜ்' பெண்கள் முகாமில் 'கலையும் மனிதனும்' என்ற தலைப்பில் தோழர் மு. க. சொற்பொழிவாற்றியபோது, தோழர் கிருஷ்ணமூர்த்தி தலைமையுரையாற்றும் காட்சி.

தெளிவும் முடிவும்

பி. சி. கணேசன் பி. எஸ்ஸி., பி. டி.

சுஜாதா இருமிக் கொண்டே சாய்வு நாற்காலியில் படுத்திருந்தாள். உடம்பு இளைத்துப் போய்க் கொடிபோல இருந்தாலும், அவளிடம் அடைக்கலம் புகுந்திருந்த அழகு மட்டும் விடை பெற்றுச் செல்லாமல், அந்த உடலிலேயே தேங்கி மெருகேற்றிக் கொண்டிருந்தது!

ஆனந்தனும் ஜன்னலருகில் அமர்ந்து, திறந்த வெளியை ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான். சுஜாதா ஒவ்வொரு முறையும் 'கல், கல்' என்று இருமும்போது, அந்த ஓசை அவனது ஆசைக் கனவுகளைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தகர்த்துக் கொண்டிருந்தது. இன்பத் தோணியாய் அமையுமென்று அவன் எண்ணிய வாழ்க்கை, இரண்டு ஆண்டுகளிலேயே துன்பச் சுமையாய் அமைந்துவிடும் என்று எப்படி அவன் எண்ணிப் பார்த்திருக்க முடியும்?

மொக்கு மலருமுன்னே அதை அரித்துக் குலைக்கும் புழுப்போல, நல்லவர்களையும் அழகுச் சிலைகளையும், அறிவாற்றல் மிக்கோரையும் வாழ விடாத அந்தப் பொல்லாத க்ஷயம்—என்புருக்கி—சுஜாதாவையும் ஒரு கை பார்க்கத் தீர்மானித்துவிட்டது. வெளிறிப்போன முகத்தோடு தேய்ந்துவிட்ட நிலவாகப் படுத்திருக்கும் சுஜாதாவை, ஆனந்தன் பார்த்தான். அவன் கண்களில் நீர் மல்கிற்று. சலனமற்றுப் படுத்திருந்த அவள் தோற்றம், ஏதேதோ வேண்டாத கற்பனைகளையெல்லாம் அவன் உள்ளத்தில் எழுப்பியது. கண்களில் நிரம்பிய நீர் கன்னங்களிலும் வழிந்தோடத் தலைப்பட்டது.

அழுது, அவளுக்குத் தன் பலவீனத்தைக் காட்டக்கூடாது என்று அவள் பார்க்குமுன்பே கண்களைத் துடைத்துக்கொண்டான்.

"சுஜா!"

"ஹூம்..."

"ஹார்லிக்ஸ் கொஞ்சம் சாப்பிடேன். ஓய்வும் உணவும் தானே உன் உடலைக் குணப்படுத்தும் என்று டாக்டர் சொன்னார்...' என்று கூறிக் கொண்டே, அவள் பதிலுக்குக் காத்திருக்காமல் ஆனந்தன் ஹார்லிக்சைக் கரைத்துக் கொடுத்தான். நடுங்கும் கரங்களோடு அவள் அதை வாங்கிக் குடித்துக் கொண்டே, "அத்தான், என்னால் உங்களுக்கு எவ்வளவு கஷ்டம்," என்றாள்.

"சுஜா, அன்பு மனைவி நோய் வாய்ப்பட்டிருக்கும்போது, அவளது நலனைக் கவனிப்பதில் கணவனுக்குக் கஷ்டமிருக்காது சுஜா! நான் கொடுக்கும் மருந்தும் உணவும் உன் உடலைக் குணப்படுத்தும்போது, வெளுத்துப்போன 'உன்' கன்னங்களில் அந்த ரோஜா நிறம் மீண்டும் படிப்படியாக வருவதைப் பார்க்கும்போது, நான் அடையும் மகிழ்ச்சிக்கு ஈடு ஏது? இணை ஏது?"—அவளுக்கு ஆறுதலளிக்க ஆனந்தன் இப்படிப் பேசினானே தவிர, ஒவ்வொரு நாளும் அந்த உயிரோவியம் உருக்குலைந்து வருவதை அவன் வேதனையோடு கவனித்துத்தான் வருகிறான்.

"ஏன் சுஜா, டாக்டர் அன்புநாதனின் 'நர்ஸிங் ஹோமி'ல் நீ கொஞ்ச நாள் தங்கி சிகிச்சை பெற்றுக் கொண்டால் என்ன? டாக்டரின் நேரடியான கவனிப்பில் இருந்தால் உடல் சீக்கிரமாகக் குணமடையலாம் அல்லவா?"

"வேண்டாம் அத்தான்...... நான் உங்களோடு இருந்து, உங்கள் கையால் மருந்து சாப்பிட்டாலே என் நோயெல்லாம் பறந்துபோய்விடும்..."—இந்த வார்த்தைகளைப் பேசி முடிப்பதற்குள் அவளுக்கு மூச்சு வாங்கியது மீண்டும் இருமத் தொடங்கினாள்.

ஆனந்தன் பதில் ஒன்றும் பேசவில்லை. எவ்வளவோ காரியங்களை எண்ணி அவன் இந்த யோசனையைச் சொன்னான். சுஜாதாவின் பிடிவாதம் அவனுக்குத் தெரியும்.

மீண்டும் திறந்த வெளியைப் பார்த்தபடியே சிந்தனையில் மூழ்கினான்.

* * *

ஆனந்தன் நன்றாக அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். சுஜாதா மட்டும் இருமிக் கொண்டே படுத்திருந்தாள். அவளுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. மெதுவாக எழுந்து சென்று அலமாரியிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்து வந்தாள். அது காண்டேகரின் 'கருகிய மொட்டு'! கல்லூரியில் படிக்கின்ற காலத்திலிருந்தே அந்தப் புத்தகத்தின்மீது அவளுக்கு அளவு கடந்த பிரேமை! பக்கங்களை மெதுவாகப் புரட்டினாள். சதாசிவன், விமலா, சுமதி, பண்டு, நமூ— இப்படி அந்தக் கதையில் அவளோடு பழகிப் போன கதா பாத்திரங்கள் ஒவ்வொருவரும் அவளுடைய உள்ளத்தில் ஒவ்வொரு விதமான உணர்ச்சியைத் தோற்றுவித்தனர். அவள் படித்து, ரசித்து, கோடிட்ட வரிகளை மீண்டும் படித்தாள். எத்தனையோ போராட்டங்கள் அவள் உள்ளத்தில் எழுந்தன. புத்தகத்தை மூடிவைத்துவிட்டுப் பெருமூச்சுவிட்டாள்...... தூக்கம் கண்ணிமைகளைத் தீண்டவும் மறுத்தது.

தோட்டத்தில் பூத்திருந்த மல்லிகையின் வாசனை மூக்கைத் துளைத்தது. நிலவு வெள்ளிக் கிரணங்களை எங்கும் பரப்பிக் கொண்டிருந்தது. இதமான குளிர்காற்று வீசிக் கொண்டிருந்தது. களை சொட்டும் முகத்தில் கவலை கரைகட்ட, ஆனந்தன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

சுஜாதா அவன் முகத்தைப் பார்த்தாள். அவள் முகம் பெருமிதத்தால் மலர்ந்தது. ஆமாம்...அன்று அவள் சொம்பில் பால் எடுத்துக்கொண்டு முதல் முறையாகத் தனிமையில் அவனைச் சந்திக்கச் சென்ற போதும், அவன் இப்படித்தான் தூங்கிக் கொண்டிருந்தான். அச்சமும் வெட்கமும் கால்களைப் பின்னுக்கு இழுக்க, ஆனால் அந்த அழகு முகத்தை அவன் நோக்காத நேரத்தில் கண்டு களிக்கும் ஆசை முன்னே உந்தித் தள்ள, அவன் அருகில் சென்று அழகை ரசித்துக்கொண்டு நின்றாள் எதிர்பாராத விதமாகத் திடீரென்று கண்விழித்துக்கொண்டு, அவன் அவளைப் பார்த்தபோதுதான் தூங்காமல் தூங்குவதுபோல் பாவனை செய்துகொண்டு படுத்திருந்திருக்கிறான் என்ற உண்மை அவளுக்குப் புலப்பட்டது. வெட்கம் பிடுங்கித் தின்ன, திரும்ப முயன்ற அவள் கரங்களைப்பற்றி......பழைய எண்ணங்கள்—இன்ப அனுபவங்கள்—அலை அலையாக வந்து அவளுடைய உள்ளத்தில் மோதின. இப்பொழுதும் ஒரு வேளை அப்படித்தான் படுத்திருப்பானோ.........மெதுவாக அவன் கட்டிலருகே சென்று குனிந்து பார்த்தாள் இருவர் மூச்சும் ஒன்றிக் கலந்தன. உண்மையிலேயே அவன் தூங்கிக் கொண்டிருந்தான். அவளுக்கு அவனை எழுப்பவும் மனமில்லை. மெதுவாகக் குனிந்து...அவன் புரண்டு படுத்தானே தவிர, எழுந்திருக்கவில்லை. பேசாமல் சிறிது நேரம் அவனுடைய கட்டிலில் உட்கார்ந்திருந்தாள். திடீரென்று முட்டி மோதிக் கொண்டு இருமல் வந்தது. அதைக் கேட்டவுடன் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான். சொர்ணச் சிலையாக சுஜாதா அருகில் உட்கார்ந்திருந்தாள்.

"சுஜாதா!'

"ஏன்...?"

"நீ இன்னும் தூங்கவில்லை?"

"தூக்கம் வர மறுக்கிறது!"

"கண் விழிக்கக் கூடாது என்று டாக்டர் சொன்னது உனக்கு ஞாபகம் இல்லை...?"

"...:...............!?"

"ஏன் சுஜா, பேசாமலிருக்கிறாய்?"

"டாக்டரின் உத்தரவு இயற்கையையுமா கட்டுப்படுத்த முடியும்...?"—சுஜாதா மெதுவாகச் சிரித்தாள்.

ஆனந்தனும் விஷயம் புரியாமல் பேசவில்லை. இயற்கையின் சக்தியை—அது புரியும் விஷமத்தை—அவனும் அறிவான்! ஆனால் சுஜாதாவின் உடல் நிலை......

மெதுவாக எழுந்தான். அலமாரியிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்து வந்தான். "சுஜா. நீ அப்படியே கட்டிலில் படுத்துக் கொள். நான் சாய்வு நாற்காலியில் படுத்தபடியே' இந்தப் புத்தகத்தைப் படிக்கிறேன். தூக்கம் வரும் வரையில் கேட்டுக் கொண்டிரு......" என்று சொல்லிவிட்டுப் படிக்க ஆரம்பித்தான். அது புத்தர் ஆசையோடு போரிட்டு வெற்றியடையும் கட்டம்......அவன் படித்தான்...அவள் தூங்கினாளா இல்லையா என்று தெரியுமுன்பே அவன் தூங்கி விட்டான்! அவன் கண்விழித்தபொழுது பொழுது நன்றாக விடிந்து விட்டது. அவளோ அப்பொழுதுதான் நன்றாக அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள்.

* * *

'அன்புநாதன் நர்சிங்ஹோமி'ல் கொஞ்ச நாள் ,போய் அவள் தங்கியிருப்பதுதான் நல்லது என்று அவன் சொன்னபோது, இப்பொழுது அவள் மறுக்கவில்லை; இரவு அனுபவம் அந்த முடிவுதான் சரி என்று அவளை எண்ணச் செய்தது. அவர்களுடைய நகரத்திற்குப் பத்து மைல் அப்பால் உள்ள கிராமத்தில் கட்டப்பட்டிருக்கும் 'அன்புநாதன் சான

✻ 8-ம் பக்கம் பார்க்க

நீட்டோலை

மு.கருணாநிதி

விஷக் காய்ச்சல்

அன்புள்ள பொன்முடி!

அப்பப்பா! உடல்வலி—தலைவலி—கைகால் குடைச்சல்—மூட்டுக்கு மூட்டு சம்மட்டியடி—மூக்கு, கண், தொண்டையெல்லாம் எரிச்சல்—நோக்காடு—சாக்காடு ஒன்று தவிர மற்று அத்தனையும் ஒருங்கே கொண்டு என்னைப் படையெடுத்த விஷக்காய்ச்சல் விட்டு இரண்டு நாட்கள்தான் ஆகின்றன. மழைவிட்டாலும் தூறல் விடவில்லை " யென்பார்களே; அதுபோல இருக்கிறது உடல் நிலை. சிறிது நேரம் தொடர்ந்து நிற்க முடியவில்லை. படிக்க முடியவில்லை. பசிக்கிறது; சாப்பிட முடியவில்லை. பலஹீனம்! பலஹீனம்!! ஒரே பலஹீனம்!!! உடம்பிலிருந்த ரத்தமெல்லாம் சுண்டிக் 'காய்ந்து ஆவியாகப் போய்விட்டதுபோலும். அதிலும் எனக்கு வந்த விஷக் காய்ச்சல், சுற்றுப் பயணத்தால் வர இருந்த சாதாரணக் காய்ச்சலோடு சேர்ந்துகொண்டதால் பெரும்பாடு படுத்திவிட்டது.

புதிய ரத்தமும், புதிய பலமும் பெற்றிட இன்னும் ஈரிரு வாரங்களாவது ஆகும். அதன் பிறகே வழக்கமான வேலைகளில் அயர்வின்றி ஈடுபட முடியுமென்று கருதுகிறேன்.

என் உடல் நிலைபற்றிய விளக்கத்தைப் படித்ததும் உனது சிந்தனை எங்கெங்கே போகுமென்று எனக்கு நன்ருகத் தெரியும். முதலில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் முடிவுகளோடு என் உடல் நிலை பற்றிய தகவல்களை இணைத்துப் பார்ப்பாய்! நீ பொல்லாதவனுயிற்றே; சும்மாயிருப்பாயா?

நண்பனுக்கு உடல் வலி, தலைவலி. கைகால் குடைச்சல், எரிச்சல், ஒரே பலஹீனம்—இதனை எண்ணிப் பார்த்துவிட்டு, பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் காங்கிரஸ் கட்சியின் நிலையை விவரித்ததையும் இதோடு ஒப்பிட்டுப் பார்ப்பாய். புதிய ரத்தமும் புதிய பலமும் விஷக் காய்ச்சலில் அடிபட்ட எனக்குத் தேவைப்படுவதுபோலவே காங்கிரஸ் கட்சிக்கும் தேவையென்று நேரு கூறியிருக்கிருரே; அதை ஒப்பிடுவாய்!

ஆனல் ஒன்று பொன்முடி, விஷக் காய்ச்சலில் பலமிழந்தவனுக்கு உரமூட்டும் மருந்துகளும், வலிவூட்டும் உணவுகளும் தரப்படின் அவன் மீண்டும் புதிய ரத்தம் பெற முடியுமென்று நான் நம்புகிறேன். நீயும் ஒத்துக்கொள்வாய். இந்த உண்மையை உணருகிற நாம், காங்கிரஸ் புதிய பலம் பெற்று மீண்டும் முன்போலவே பவனி வரும் என எந்த நம்பிக்கையோடு எடுத்துச் சொல்ல இயலும்!

எனக்கு விஷக் காய்ச்சல் வந்து விலகிவிட்டது; அதனல் புதிய பலம் பெற மருந்து தேடுகிறேன். காங்கிரசுக்குப் பிடித்த காய்ச்சல் இன்னும் விடவே இல்லையே! அதுவும் சென்னைக் காய்ச்சலாகத் தெரியவில்லை; பம்பாய்க் காய்ச்சலாக அல்லவோ தென்படுகிறது!

சென்ற முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னல் உலகமெங்கும் பரவி, சுமார் இரண்டு கோடி மக்களைக் கொள்ளை கொண்ட பயங்கரமான விஷக் காய்ச்சலின் பரம்பரையன்ருே பாரத காங்கிரசைப் பற்றிக் கொண்டு ஆட்டுகிறது! காய்ச்சல் தீருவதற்கு வழியில்லை. கண்ணெல்லாம் இருண்டுவிட்டது. காதுகள் அடைத்துவிட்டன. தொண்டைக் குழியில் "கல கல" சப்தம் தோன்றிவிட்டது. வயிற்று வீக்கம்—வாந்தியும் பேதியும்! கைகால் அசையவில்லை! தேகமெங்கும் பனிபோல் ஜில்லிட்டு வருகிறது! இருதயமோ ஈனசுரத்தில் அழுகிறது! இதற்குமேல் உற்ருர் உறவினருக்குத் தந்தி கொடுப்பதுதான் முறையே தவிர, தேகப் பயிற்சி அளித்து உயிரூட்டுகிறேன் என்று தோள் தட்டி வருவது அறிவுடைமையாகாது. ஆனல் அலகாபாத் வீரரோ—மருத்துவத்தில் புலியென எண்ணிக் கொண்டு, மருந்துப் பேழை சகிதம் மார்தட்டி முழக்கமிடுகிருர்; புதைகுழிக்குப் போகும் கட்சிக்குப் புதிய பலம் தருவேன் என்று!

"காங்கிரஸ் ஸ்தாபனம், மகந்துவின் தலைமையில் உள்ள மடம் போல ஆகிவிட்டது. பெரிய தலைவர்களே இதன் பீடத்தில் அமர்ந்து, புதிய திறமைசாலிகளுக்கு முட்டுக்கட்டையாக வுள்ளனர்."

மேலே காணப்படும் வாசகம் நமது கழகத்தைச் சேர்ந்தவர்களாலோ—வேறு இடதுசாரிக் கட்சியினராலோ—வெளியிடப்பட்டதல்ல; காங்கிரசுக்குப் பலந்தேட முனைந்திருக்கும் பண்டித நேரு அவர்களே திருவாய்மலர்ந்தருளியதாகுமெனச் சொல்லும்போது உனக்கும் ஒரு பெருமூச்சு விடத் தோன்றுகிறதல்லவா? எவ்வளவு பெரிய உண்மை—எவ்வளவு நாள் கழித்து—எத்துணை தாமதமாக வெளிவருகிறது! ஆனுலும் பரவாயில்லை; எப்படியோ வெளிவந்ததே—என்று நான் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுக்கொண்டேன்!

சாதாரண சந்தைமடங்கூட அல்லவாம்; காங்கிரஸ்! மகந்துவின் தலைமையில் உள்ள மடமாம்! அந்த மடத்திலேயிருக்கும் கழுகுகளோ, சிறு குருவிகளை உள்ளே அனுமதிப்பதில்லையாம். அதனுல் காங்கிரசில் புதிய ரத்தம் வந்து சேரவில்லையாம். இந்தக் குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்லக் கூண்டிலே ஏறவேண்டியவர், தராசு ஏந்திய நீதிபதிபோலக் கொலுவிருந்துகொண்டு, குறைபாடு பற்றி விமர்சிக்கிருர்.

மகந்துவின் தலைமையில் காங்கிரஸ் இருக்கிறது! யார் அந்த மகந்து? தேபரா? அய்யோ பாவம்; அவர் எடுபிடித் தம்பிரான்! மகந்து வல்ல! அந்த மகத்துவம் பெற்றவருமல்ல!

பிறகு யார்தான் மகந்து—அந்த மடத்துக்கு? உலகமெங்கும் 'பட்டணப் பிரவேசம்' நடத்துகின்ற பெம்மான்—மக்கள் வேட்டையாடப்பட்டபோது மராட்டியம் சென்றபோதும் மனங்கலங்கா மடாதிபதி—இலட்சோப லட்சம் தமிழர் வாடிடும் இலங்கையில் ஜொலித்து வரும் நாட்டியப் பிஞ்சுகளின் நளினங் கண்டு மகிழ்ந்த மகந்து — பண்டித நேருவே காங்கிரஸ் மடாலயத்தின் சர்வ சுதந்தர—சர்வ வல்லமையுள்ள—சர்வ சௌபாக்யம் மிகுந்த—சர்வ ஜன ரட்சக — மகந்துவாகும்! அவரே கூறுகிருர் மகந்துவின் தலைமையில் இயங்கும் மடாலயம் காங்கிரஸ் என்று!

ஏழை பாழைகள் ஒதுங்குகின்ற சத்திரமாகத்தானிருந்தது காங்கிரஸ்—இன்ருே அது மடமாகிவிட்டது! அரசியற் பண்டிதர், காங்கிரஸ் — மடமாகி விட்டதென்கிருர். மருத்துவப் பண்டிதரோ, அது முடமாகி விட்டதென்கிருர்!

தேர்தலிலே காங்கிரஸ் அமோக வெற்றி பெற்றிருப்பதாகப் பறை சாற்றப்படுகிறது. காங்கிரசை அசைக்க யாராலும் ஆகாது என சூளுரைக்கும் சூரர்கள் பல திக்கிலும் சென்று முழங்குகிருர்கள். ஆயினும், காங்கிரஸ் மடமாகப் போய்விட்டது என நேரு துரைமகனுர் வருந்துகிருர்.

இதிலிருந்து. காங்கிரஸ் பெற்ற வெற்றியின் ரகசியம் காணக் கிடக்கிறது. அல்லவா! வெற்றி பெற்றது காங்கிரஸ் அல்ல; காங்கிரசின் பெயரால் செலவிடப்பட்ட பணம்—திறந்துவிடப்பட்ட சீமான்களின் இரும்புப் பெட்டிகள்—மடால

'முரசொலி'-முக்கிய அறிவிப்பு

விற்பனையாளர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்படும் 'முரசொலி' குறித்த காலத்தில் அனுப்பப்பட்டும் விற்பனையாளர்கள் பலருக்குக் கிடைக்கவில்லையென்றும், பலர் தாமதமாகப்பெற்றதாகவும் அறிவித்துள்ளனர். இதற்குக் காரணம் அஞ்சல் நிலையங்களில் ஏற்படும் குழப்பமே தவிர, நமது அலுவலகத்தில் அல்ல. சுதந்திர சர்க்காரில் தபால் போக்கு வரத்து நடைபெறும் அவலட்சணத்திற்கு இதுவும் ஒரு எடுத்துக் காட்டு. விரைவில் மேலால் ஆக வேண்டியவற்றிற்கு நடவடிக்கை எடுத்து 'முரசொலி' குறித்த காலத்தில் கிடைக்க முயற்சி செய்கிருேம் என்பதைத் தவிர வேறென்ன கூற முடிகிறது நம்மால்!

—நிர்வாகி, 'முரசொலி'

பயன்படாது இனிமேல்- பச்சை மூங்கில் வெட்டி வா!

த்து மகந்துவுக்குக் கொட்டிக் குவித்து காணிக்கை வழங்கி 'அருள் சீட்டு' பெற்ற ஆலை அரசுகளும்; மிட்டாக்களும், மிராசுகளும் அள்ளித் தந்த ஆதரவு — இவைகளே வெற்றிபெற்றன—என்ற பகிரங்க உண்மைக்குப் பலம் தேடித் தருகிறவகையிலேதான் பண்டிதரின் பேச்சு அமைந்திருக்கிறது.

பல்லுப் போன கிழவி—புல்லைப்போல் காய்ந்துவிட்ட தன் மேனிக்குப் புதிய எழில் தேடி—தேடிய எழில் கிட்டிவிடின் தேவரும் மூவருமே என் வலை வீழ்வார் எனக் கண்ணுடியைப் பார்த்து ஏங்குதல் போல், நேரு பேசுகிருர்:

பலவீனங்களைக் களைந்து, போராட்டக் காலத்தில் உள்ளதுபோல் செயல்படக்கூடிய ஆற்றலை காங்கிரஸ் பெறும்!"

நேருவின் மொழியே இது! இளமை திரும்பும் எனக் கிழவி எதிர் பார்க்கிருள்—சுருங்கிய தோலில் சுந்தரம் தோன்றும்; மங்கிய விழியில் ஒளி கிளம்பும்; ஒட்டிய கன்னம் சேர்பிதம் பெறும்-என நம்புகிருள்.

கிழவி, தன் உடலைப்பற்றிப் பேசுகிருள். நேரு, அந்த உடலினும் கிழாகக் கெட்டு விட்ட காங்கிரஸ் பற்றிப் பேசுகிருர்.

காங்கிரசுக்கு ஒரு கோடி அல்லது இரண்டு கோடி, மெம்பர்கள் இருப்பதாகக் கணக்கு காட்டுகிறது; இவர்கள் எல்லாம் எந்த அளவுக்கு உண்மையான மெம்பர்கள்? பெரும்பாலோர் உண்மையான மெம்பர்கள் அல்ல!"

கிழவி, இளமை பெற முடியாது! காங்கிரஸ் புதிய எழில் பெற முடியாது என்பதற்கு மேலே கண்ட நேருவின் உரையே சான்ருகிறது! கோடிக் கணக்கில் மெம்பர்கள் இருப்பது மட்டுமல்ல; கோடிக் கணக்கில் பொருள் படைத்தோர் ஆட்டிப் படைக்கும் குடுபிடிகளாகவும் அவர்கள் இருக்கிருர்களே!

தேர்தலிலே இன்ன தொகுதியிலே வெற்றி பெற வேண்டும்; யாரை நிறுத்தலாம் என்று யோசிக்கும் போழ்து, நேரு சொன்ன "உண்மையான மெம்பர்கள்" யாராவது காங்கிரஸ் மகந்துகளின் கண்ணில் பட்டார்களா? காங்கிரசின் பக்கம் தலை வைத்தும் படுக்காத தனவான்கள் அல்லவா வெலாகு தந்து அழைக்கப்பட்டனர்!

செட்டிநாட்டுச் சீமான்—கப்பலோட்டிக்கிழுத்தவரா சிதம்பரனாரைப் போல? மூத்திரக் கலத்தில் கஞ்சி வாங்கி சாப்பிட்ட வ. உ. சிதம்பரம்

வளர்த்த காங்கிரசில் 'முத்தையாக்கள்' நுழைய முட்டுக் கட்டையே கிடையாதே!

சட்டசபையிலே பார்க்கிறேன் பொன்முடி; உப்பு சத்யாக்கிரகத்தில் உதையுண்ட சர்தார் வேதரத்தினம் ஒரு மூலையிலே இருக்கிருர்—இன்னெரு கோடியிலே சாமியப்பாவின் மைந்தரும், மன்னை சாமிநாத உடையாரும் அமர்ந்திருக்கிருர்கள்! 'காங்கிரஸ் என்ருல் கருப்பா—சிவப்பா?' என சின்னுட்களுக்கு முன் கேட்ட சீமான் வீட்டினர் அவர்கள்!

நேரு சொல்கிருர்; மடாலயத்தில் புதிய மாணவர்கள் நுழைய முடியவில்லை யென்று!

ஆலை அதிபரும், ஆள் அம்பு ஏராளமுடையோரும், ஐஸ்வர்யக் குபேரர்களும், அள்ளக் குறையா செல்வம் பெற்ருேரும் அந்த மடாலயத்தில் உண்டிற் பணம் கட்டி உறுப்பினராகிக் கொண்டே யிருக்கிருர்கள்; ஆயினும் நேரு கூறுகிருர்—புதியவர்கள் போதவில்லை யென்று!

"காங்கிரசில் ஒழுக்கக் குறைவு அதிகரித்து வருகிறது!"—

இதைச் சொல்லுவதும் மடாலயத்தின் மகந்துதான்!

இதுமட்டுமல்ல; நேரு கூறியிருக்கிருர்.

என்னுடைய விஷக் காய்ச்சல் விளைவுகளை காங்கிரசோடு ஒப்பிட்டுப் பார்ப்பதற்குமுன், நேருவின் வாசகங்கள் அத்தனையையும் ஒருமுறை படித்துக் கொள்!

★ "காங்கிரஸ் மடமாகி விட்டது"

★ "காங்கிரஸ்காரர்களிடையே வகுப்பு வாதம்-மாகாணப் பித்து-ஜாதிப் பித்து-மக்களிடம் அணுகாமை—ஆகியவை கேவலமான அளவுக்கு வளர்ந்து விட்டன"

★ " காங்கிரஸ் ஸ்தாபனம் நல்ல நிலைமையில் இல்லை"

★ "பெரும்பாலோர் உண்மையான மெம்பர்கள் அல்ல!"

★ "ஒழுக்கக் குறைவு அதிகரித்து வருகிறது"

★ " ஒரே திசையில் செல்லும் உணர்ச்சி இருக்கவில்லை."

★ "சிலர் பதவியில் நிரந்தரமாக உட்கார்ந்து கொண்டு, சரியான ஆட்களைப் பதவிக்கு வர வொட்டால் தடுக்கின்றனர்"

—மேற்கண்டவைகள் எல்லாம் காங்கிரஸ் விஷக் காய்ச்சலில் இருந்து விடுபட்டு, புதிய பலம் தேடுகிற கட்டத்திலே இருக்கிறது என்பதையா உறுதிப்படுத்துகின்றன? அல்ல;

அல்ல—நான் முன்பு குறிப்பிட்டதுபோல பம்பாய் காய்ச்சலுக்கு ஆளாகி பாடை தேடும் படலத்திற்கு அணுகிவிட்டது என்பதைத்தான் உணர்த்துகின்றன.

★ மடமாகிவிட்டது என்கிருர்!

மடத்தில் மக்களுக்கு வேலையில்லை! ... கையில் பணமுள்ள வரையில் காணிக்கை செலுத்துவோருக்கும்—உடலில் அழகுள்ள வரையில் கணிகைகளுக்கு மட்டுமே அங்கு இடமிருக்கும்!

★ வகுப்புவாதம்-மாகாண, ஜாதிப் பித்துக்கள் பிடித்து விட்டன என்கிருர்!

பித்து, ஜன்னியின் உச்ச கட்டம்! வாதம், பயங்கரமான இழுப்பு நோய்!

★ மக்களிடம் அணுகாத நிலைமை வளர்ந்து விட்டதாம்!

அழுகிய தேகம் — அதாவது குஷ்டரோகம் ஆட்கொண்டு விட்டது; காங்கிரசின் கனகம் நிகர் மேனியை!

★ பெரும்பாலோர் உண்மையான மெம்பர் அல்ல!

அலங்காரத்திற்குப் பொருத்தப்பட்ட போலிப் பற்களின் வரிசை போலும்! ரப்பர் கால் போலும்! கையுரையைக் கழற்றினுல் விரல்கள் இல்லை போலும்!

★ ஒழுக்கக் குறைவு அதிகரித்து வருகிற தென்கிருர்!

அதன் விளைவுதானே மேற்கண்ட நோய்கள் எல்லாம்!

★ ஒரே திசையில் செல்லும் உணர்ச்சி இருக்கவில்லையாம்!

இருக்காது; இருக்காது! இதுவொன்றே போதுமானது.இனி பிழைக்காது என்பதற்கு உதாரணம்!

—இவ்வளவும் கூறிவிட்டு, மடத்தைத் திருத்துவோம் வாரீர் என்று யாரை அழைக்கிருர் நேரு?

தீர்ந்துபோன விஷயம்—திருத்துவதற்கு என்ன இருக்கிறது?

தொடர்ந்து அடிக்குது விஷக் காய்ச்சல்! பழைய நோய்களும் படையெடுத்து விட்டன! பச்சை மூங்கில் வெட்ட வேண்டியதுதான் பாக்கியே தவிர, "இச்சைக்கினியவளே!" என்று மேல் விழுந்து அழுவதால், நெஞ்சு அழுந்தி உயிர் உடனே போகுமேயன்றி வேறு பயனில்லை! இதைப் பண்டிதரும் காங்கிரசை உயிர்ப்பிக்க.பகற் கனவு காண்போரும் விரைவில் உணர்வர்; அனுபவப்பூர்வமாக!

அன்புள்ள,
நண்பன்.

பத்தாம் தேதியன்று
விற்பனைக்குக் கிடைக்கும்!

கே. ஏ. மதியழகன்
புலவர் குழந்தை
கா· அப்பாத்துரை
பி· சி· கணேசன்
ஆகியோரின்
எழுத்தோவியங்களுடன்

'முத்தாரம்'

'முறம்'-
ஆசிரியர் மு. க. வின்
கவிதை நடைச் சிறுகதை!
விலை 8 அணு

இன்றே விற்பனையாளரிடம் உங்கள்
பிரதிக்குச் சொல்லி வையுங்கள்!
விற்பனையாளர்கள் தேவையான முன் பணம் அனுப்பி
வைக்காவிடில் அதிகப் பிரதிகள் அனுப்பப்படமாட்டாது!

தெளிவும் முடிவும்...

✽ 5-ம் பக்கத் தொடர்ச்சி

டோரியத்திற்கு சீக்கிரமே அவர்கள் புறப்பட்டார்கள்.

டாக்டர் அன்புநாதன் பெயருக்கேற்ற குணமுடையவர். அவருடைய மனைவி கிரேஸ் தெரிசாவும் அப்படித்தான். அவளே தான் அந்த 'நர்சிங் ஹோமி'ன் தலைமை நர்சும். ஏசுநாதரின் அன்புரைகளையே வாழ்க்கையின் வழி காட்டியாகக் கொண்டவர்கள்...அவர்கள் கொடுக்கும் மருந்தா, அல்லது இதமான வார்த்தைகளா நோயைக் குணப்படுத்துகின்றன என்று தெரியாமல் நோயாளிகள் விழித்தனர்.

சுஜாதாவுக்கு அந்த 'நர்சிங் ஹோம்' மிகவும் பிடித்துப் போய்விட்டது. வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று முறை ஆனந்தன் அங்கு வந்து சுஜாதாவுடன் அளவளாவி விட்டுப் போவான். அன்புநாதனின் கனிவான பேச்சும், தெரிசாவின் தாயன்ன பரிவும் சுஜாதாவிற்கு அவர்களிடம் மிகுந்த மதிப்பை உண்டாக்கி யிருந்தது.

இருபது வயதுகூட சரியாக நிரம்பப் பெறாத சுஜாதா—திருமணமாகி இரண்டு ஆண்டுகளுக்குள்ளே இப்படி ஒரு கொடிய நோயுக்கு ஆளானதை எண்ணி அன்புநாதன் மிகவும் வருத்தப்பட்டார். சுஜாதாவை குணப்படுத்துவதில் அவருடைய வைத்தியத் திறமை முழுவதையும் காட்டினார்.

பொழுது போகாத நேரங்களில் சுஜாதாவிடம், சில சமயம் மனைவியுடனும் சில சமயம் தனியாகவும் வந்து பேசி ஆறுதல் சொல்லிக் கொண்டிருப்பார். அன்புநாதனின் அன்புரைகள் அவளுடைய உள்ளத்தில் ஒரு சலனத்தைத் தோற்றுவித்திருந்தன. சிகிச்சைக்குச் சில சமயங்களில் அவர் வராவிட்டால்கூட அவள் மனம் திருப்தியடைய மறுத்தது.

ஒரு நாள் காலை; மணி ஒன்பதிருக்கும். சுஜாதா தூங்கிக் கொண்டிருந்தாள். அவள் கண் விழித்தபொழுது, அவளுடைய அறையின் வாயிற்படியில் நின்று கொண்டு அன்புநாதன் அவளையே கவனித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். அவள் திடீரென்று விழித்துக் கொண்டு, அவருடைய செயலைக் கவனித்து விட்டவுடன் அவர் முகம் வெளுத்து விட்டது. காரணம், அந்தக் காலை நேரம் அவர் அங்கு வரவேண்டிய நேரமல்ல!

டாக்டர் மெதுவாக அந்த இடத்தை விட்டு நகர்ந்தார். அவருடைய எதிர்பாராத செயல் சுஜாதாவிற்கு முதலில் திகைப்பை உண்டாக்கினாலும், அவளையறியாமலேயே "டாக்டர்" என்று அழைத்தாள். அந்த அழைப்பில் அவளுடைய உள்ளத்தின் ஆழத்தில் ஒடிக் கிடந்த எண்ணத்தின் நிழல் தெளிவாகத் தெரிந்தது.

விற்பனையாகிறது!

: புதையல் :

திரைக் கதை வசனப் புத்தகம்

விலை 8 அணு :: கழிவு 40 சத வீதம்

[தேவையான பிரதிகளுக்கு கழிவு நீக்கி முன்பணம் அனுப்பவும். அல்லது வி. பி. யில் அனுப்ப வேண்டுமென்றாலும் தெரிவிக்கவும். முன்பணம் அனுப்புவோருக்கே முதல்சலுகை தரப்படும்.]

எம். கே. பதிப்பகம்,

த. பெ. 712, : : சென்னை—6.

"தூக்கத்தைக் கலைத்ததற்கு மன்னிக்கவேண்டும், சுஜாதா!" என்றார் டாக்டர்.

"சேச்சே! அதெல்லாம் ஒன்று மில்லை; குணமடைந்து வரும் நோயாளிக்கு நிம்மதியான தூக்கம் இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டியது உங்கள் கடமை தானே?" என்று டாக்டரின் நெருக்கடிக்கு அவளே சமர்தானம் கூறிச் சமாளித்தாள்.

"சுஜாதா, நீங்கள் இப்பொழுது நன்றாகவே குணமடைந்து வருகிறீர்கள். ஒரிரு வாரங்களில்கூட ஆஸ்பத்திரியிலிருந்து 'டிஸ்சார்ஜ்' ஆகிவிடலாம்," என்று கூறி, இரத்தம் இருக்கிறதா என்பதைக் கவனிக்கக் கண்களைப் பிதுக்கிப் பார்த்தார். எத்தனையோ நெருக்கடியான 'ஆபரேஷன்'களைச் செய்தபோது நடுங்காத அவருடைய கை இப்பொழுது நடுங்கியது. டாக்டரின் ஸ்பரிச இன்பத்தில் சுஜாதாவின் உடலும் நடுங்கியது.

தூரத்தில் சுவரில் சிலுவையில் மரித்த ஏசுநாதரின் படம் தொங்கிக் கொண்டிருந்தது!

"டாக்டர், பூர்ண குணமடையும்வரையில் நான் இங்கேயே இருக்க முடிவு செய்து விட்டேன்,"—சுஜாதா அவளுடைய முடிவை டாக்டரிடம் அறிவித்தாள்.

டாக்டர் பேசுமுன் ஏசுநாதரின் படம் அவருடைய கண்களில் பட்டது. "பார்க்கலாம்," என்று பெருமூச்சு விட்டபடியே அங்கிருந்து எழுந்து வெளியே நடந்தார்!

* * *

குடும்பம்—கட்டுப்பாடு. ஆகிய இரண்டு அமைப்பைக் கரைகளாகக் கொண்டு ஓடும் ஆறுதான் ஒழுக்கம். இந்தக் கரைகள் சரியாக அமையாவிட்டால், ஒழுக்கம் காட்டாறுக் கரையுடைத்துப் புறப்பட்டு விடும்.

காலை நிகழ்ச்சிக்குப் பின் சுஜாதாவின் உள்ளத்தில் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது. இரவு எட்டு மணிக்குமேல் விளக்கு எரியக் கூடாது என்று சட்டம் இருந்தும், அவள் அறையின் விளக்கை அணைக்க வில்லை காரணம், ஆஸ்பத்திரியின் இந்த விதியை மீறுகின்றவர்களைக் கண்டிக்க நேராக டாக்டர் வந்து விடுவார் என்பதை சுஜாதா அறிவாள்!

அவள் திட்டம் தோல்வியடைய வில்லை! அன்புநாதன் வந்தார். அவர் வருவதை தூரத்தில் கண்டவுடன் சுஜாதா விளக்கை அணைத்து விட்டாள்.

"சுஜாதா!"

"டாக்டர்...!"

"தூங்கவில்லை?"

"தூக்கம் வரவில்லை!"

"அப்படியானால் சற்றுநேரம் உலாவி விட்டு வரலாம்; வாருங்களேன்!"

பதில் பேசாமல் சுஜாதா டாக்டரைப் பின் தொடர்ந்தாள். இருவரும் அருகருகே; ஆனால் சற்று விலகிய சென்றனர். ஆஸ்பத்திரியிலிருந்து அவர்கள் செல்லும் தூரம் அதிகரிக்க அதிகரிக்க அவர்கள் இடையே உள்ள தூரம் குறைந்திருந்தது. தோள்கள் உராய்ந்தன. டாக்டரின் கை சுஜாதாவின் இடுப்பைச் சுற்றி வளையமிட்டது. சுஜாதாவும் அந்த உரிமையை ஆட்சேபிக்கவில்லை.

ஏசுநாதரின் பத்து நல்லொழுக்க நெறிகளும் பைபிளில் பத்திரமாக இருந்தன!

"சுஜா!"—செல்லமாக அவளைப் பெயர்சொல்லி அழைத்து, அருகில் அணைத்தபடியே அதனை முத்தமிட்டார்.

"சுஜா!"—அப்படி அவளை அன்போடு அழைக்க உரிமையுள்ள ஆனந்தனின் நினைவு அவளுக்கு வந்தது. அன்றொரு நாள் இரவு, விரகதாபம் வேதனைக் குரல் எழுப்பினாலும், அவள் உடல் நலம் குலையாமல் இருக்கத் தன் சுகத்தைத் தியாகம் செய்த ஆனந்தன்! ஆனால் அவள் உடல் நலத்தில் கருத்தேதும் இன்றி தன் சுகத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள சுயநலத்தோடு முயலும் அன்புநாதன்! சுஜாதா தெளிவு பெற்றாள். டாக்டரின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள்.

'நேரமாகிவிட்டது; போகலமா டாக்டர்?'

டாக்டர் பதில் பேசாமல் அவளைப் பின்தொடர்ந்தார்.

* * *

மறுநாள் காலை; தெரிசாகூட ஊரிலில்லை. டாக்டரிடம் சொல்லிக்கொண்டு பெட்டி படுக்கையோடு சுஜாதா வீட்டுக்குப் புறப்பட்டாள். டாக்டர் மறுப்பேதும் சொல்லவில்லை. அவர் எப்படிச் சொல்ல முடியும்?

'டாக்சி டிரைவர்' பெட்டி, படுக்கையைக் காரில் வைத்தான். "போய் வருகிறேன், டாக்டர்," என்று எதுவும் நடக்காததுபோல் கூறிவிட்டுக் காரில் ஏறிக்கொண்டாள். டாக்டரும் கை கூப்பி விடை கொடுத்தார்.

கார் சுஜாதாவின் வீட்டின் முன் நின்றது. வேலைக்காரர்கள் எஜமானியின் எதிர்பாராத வரவால் மகிழ்ச்சியடைந்தனர். பெட்டி, படுக்கையை உள்ளே எடுத்து வைத்தனர்.

மனத்தின் பாரம் நீங்கி, நிம்மதி நிரம்ப ஆனந்தனின் அறைக்குப் போனாள். ஆனந்தன் அலுவலகம் சென்றிருந்தான். அவனுடைய மேஜையின்மீது 'கருகிய மொட்டு' நாவல் கிடந்தது. பிரித்துப் பார்த்தாள். அதன் உள்ளேயிருந்து ஒரு புகைப்படம் கீழே விழுந்தது. ஆச்சரியம் மிக எடுத்துப் பார்த்தாள். அவள் தலை கிறு கிறுத்தது. பூமி மேலும் கீழும் ஆடியது. படம் ஒரு பெண்ணின் படம்! யார் அந்தப் பெண்?

அன்புநாதனின் மனைவி சாட்சாத் கிரேஸ் தெரிசா தான்! படத்தின் பின்னே மணியான எழுத்துக்களில் ஆங்கிலத்தில் 'டார்லிங் தெரிசா' என்ற குறிப்பிருந்தது.

விரிந்து கிடந்த 'கருகிய மொட்டை'ப் பார்த்தாள்!

"குடும்பம் என்பது கற்பக மரம் என்று நான் காவியங்களில் சிறுவயதில் படித்திருந்தேன். என் அனுபவம் அதற்கு முற்றும் மாறானது! அது ஒரு விஷ விருட்சம்!"

—என்றவரிகள் அவள் கண்களில் பட்டன! இதுவரையில் வெறும் இலக்கியமாக இருந்த வரிகள் இப்பொழுது நிர்வாண உண்மையாகக் காட்சியளித்தன!

வேலைக்காரர்களை அழைத்து பெட்டி படுக்கையைக் காரில் வைக்கச் சொன்னாள். அவர்கள் ஒன்றும் புரியாமல் சொன்னபடி செய்தார்கள்.

காரில் போய் ஏறிக் கொண்டாள்!

"டிரைவர்! காரை 'விடு!" என்றாள்.

"எங்கே?" என்றான் டிரைவர் திகைப்புடன்!

"அன்புநாதன் நர்சிங் ஹோமிற்கு!" என்று அமைதியாகப் பதிலளித்தாள் சுஜாதா! ✽

மறை கழன்ற மலை...

சுண்டல் வாங்க வருவாராம், 'சுயமரியாதை வீரர்'!

❋ 4-ம் பக்கத் தொடர்ச்சி

திலே கொளுத்தப்பட இருந்த ராமாயணத்தைக் காப்பாற்றியது—என்ற பரம ரகசியம் யாருக்கும் தெரியாது என எண்ணிக் கொண்டீரோ?

திருவண்ணாமலையில் ஆச்சாரியாருடன் கட்டித் தழுவியதை —ஆச்சாரியார் ஆட்சியை நிபந்தனையின்றி (வழக்கம் போல்) ஆதரித்ததை- அரசியல் தெளிவு படைத்தோர் அதற்குள் மறந்து விடவில்லையென்பதை வக்கீல் அய்யாவே! தாங்கள் உணர்வீராக!

வடநாட்டுப் பட்டேல் வந்தபோது, அனைவருக்கும் காட்டப்பட்ட கருப்புக் கொடி அவருக்கேன் காட்டப்படவில்லை என்பதற்கான உண்மைக் காரணத்தை "ஹோட்டல் பசோட்டா" வைக் கேட்டாலன்றோ தெரியும்!

அண்ணாவை முதலியார் என்று அழைத்திட வாய் கூசவில்லையா உமக்கு? சாதிப் பெயரைச் சொல்லி அவர் ஓட்டுக் கேட்டார் என்று சரடு விடுகிறீர்களே; ஒழுங்கானவர்களாயிருந்தால் அதை நிரூபிக்க முடியுமா? ஓட்டர் பதிவுத் தாளில் பதிவு செய்யும் அலுவலாளன் செய்திருந்த குறும்புத்தனமே அதுவன்றி அண்ணா விரும்பி அதனை இட்டுக்கொண்டார் என்பதற்கு எடுத்துக்காட்டொன்று இயம்புவீரோ நாணயமாய்!

அண்ணாத்துரை முதலியார் கம்ப ராமாயணம் பிரசங்கம் செய்வாராம்; இவர் சுண்டல் கடலை வாங்கிச் சாப்பிட வருவாராம்; சுயமரியாதை வீரர் அறிக்கை விடுகிறார். அதுவும் சி. ஆர். தலைமையில் மயிலாப்பூர் குளக்கரையில் நடக்குமாம் —அதை இவர் குளக்கரையில் அமர்ந்து மீன் பிடித்துக் கொண்டு (மீன் பிரியர் அவர்) கேட்டு ரசிப்பாராம்!

ராமாயணப் பிரசங்கம் செய்வதற்குத் தகுதியான அறிவும் —தகுதியான தேக அமைப்பும் —தகுதியான பேச்சுத் திறனும் பெற்றவர் தென்னூரார் (டி. பி.) தான் என்று அகில உலகமே பேசுகிறது. (அகில உலகம் என்பது இங்கே அக்கிரகாரத்தைக் குறிக்கும்) அவரோ அண்ணாவை வம்புக்கு இழுக்கிறார்.

அவர் சற்றுக் கலங்கியிருக்கிறார் என்பதற்கு ஒரு உதாரணம் போதுமானது. துணி கிழிக்கும் பருவத்தில் அலைகிறார் என்பதற்கு இதுவே எடுத்துக்காட்டு. அவரது சரித்திரப் பிரசித்திபெற்ற அறிக்கையில் ஒரு பகுதி:—

"கம்பராமாயணப் பிரசங்கம் செய்யும் டி. கே. சி., கிருபானந்தவாரி மற்ற அதிகப் பிரசங்கிகள் புகழப்படுவதைப் பாருங்கள்."

"பிரசங்கம் செய்யும் டி. கே. சி." என்கிறார் வேதாசலனார்! ஒரு வேளை தேவலோகத்தில் (?) டி. கே. சி. பிரசங்கம் செய்து கொண்டிருப்பதாகக் கருதிக் கொண்டு அறிக்கை விடுத்தாரோ என்னவோ; யாரறிவார் பராபரமே!

இந்த நிலையில் அவரது உடல் நிலைக்காக நாம் இரக்கம் தெரிவிக்க வேண்டுமே தவிர கண்டிப்பது தகாதுதான்; பாபம்! வேதாசலம் என்றால் தனித் தமிழில் மறைமலை என்பர்! இதுவோ "மறை கழன்ற மலை" யாகவன்றோ காட்சியளிக்கிறது!

ஃ

குளித்தலை வட்ட விவசாயிகள் முன்னேற்ற சங்கம்.

மேற்கண்ட பெயரில் விவசாயிகள் அமைப்பு ஒன்று தோற்றுவிக்கப்பட்டு, உறுப்பினர்கள் சேர்க்கும் துவக்க வேலைகள் ஊக்கமுடன் நடைபெற்று வருகின்றன. இது பற்றிய விளக்கங்களையும், விரைவில் குளித்தலை வட்டத்தில் விவசாயிகள் மகாநாடு நடத்துவதுபற்றிய விபரங்களையும் குளித்தலை தோழர் முத்துகிருட்டினன் அவர்களும், கவுண்டம்பட்டி தோழர் முத்து அவர்களும் அறிஞர் அண்ணா அவர்களையும் தோழர் மு. கருணாநிதியையும் கலந்து தெரிவித்து சங்க அமைப்புக்கான செயல் முறைகள் பற்றியும் விவாதித்தனர். விரைவில் மாநாடு குளித்தலை வட்டாரத்தில் நடைபெறுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன, மாநாட்டை யொட்டி ஆங்காங்கு கிளைச் சங்கங்கள் அமைக்கப்படுவதற்கான பணிகளும் மேற்கொள்ளப்படும்.

நூலேணி

மகாகவி பாரதியார் கவிதைகள்

தமிழ் நாட்டுத் 'திங்கர்ஸ் லைப்ரரி' என்று சொல்லத்தக்க சக்தி காரியாலயத்தினர் உயர் கருத்துக்கள் செறிந்த புத்தகங்கள் பல வெளியிட்டு புகழ் பெற்றவர்கள். அன்னோர் இப்போது ஏழையரும் இலக்கியச் செல்வம் பெற்றிடும் விதத்திலே பாரதியாரின் கவிதைகளைக் குறைந்த விலையில் மலிவுப் பதிப்பாக வெளியிட்டிருக்கிறார்கள்!

பாரதியாரின் கவிதைகளைப் பற்றி நாம் விமர்சிக்கத் தேவையில்லை. இறைவன் நடத்தியதாகச் சொல்லப்படுகிற கேலிக் கூத்துக்களைத் திருவிளையாடல்கள் என்றும்; கல்வியறிவில்லா மூடனிடம் பொருளிருந்தால் அவனை அறிஞர் தலைவன் என்றும், புகழ்வதற்கு மட்டுமே புலவர்கள் உபயோகித்த கவிதையை நாட்டுப் பற்றினைத் தூண்டிவிட முதன் முதலில் பயன்படுத்தி, விடுதலைக் கிளர்ச்சிக்குக் கவிதையையும் ஒரு கருவியாக்கித் தந்த பெருமைக்குரியவர் பாரதியார். இந்த மலிவுப் பதிப்பு பாரதியாரை ஒவ்வொரு தமிழனுடைய இல்லத்திற்கும் அழைத்து வருமென்றே நம்புகிறோம்.

இந்தத் தொகுப்பில் இதுவரை வெளிவராத "உயிர் பெற்ற தமிழர் பாட்டு" என்னும் கவிதை இடம் பெற்றிருக்கிறது.

ஒன்றுமற் றொன்றைப் பழிக்கும்—ஒன்றில்
    உண்மையென் றோதிமற் றொன்று பொய்யென்னும்
நன்று புராணங்கள் செய்தார்—அதில்
    நல்ல கவிதை பலபல தந்தார்.

கவிதை மிகநல்லதேனும்—அக்
    கதைகள் பொய்யென்று தெளிவுறக் கண்டோம்;
புவிதனில் வாழ்நெறிகாட்டி—நன்மை
    போதிக்கும் கட்டுக்கதைகள் அவைதாம்.

★

சூத்திரனுக்கொரு நீதி—தண்டச்
    சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி
சாத்திரம் சொல்லிடுமாயின்—அது
    சாத்திரம் அன்று சதியென்று கண்டோம்.

—இது போன்ற புது யுகக் கருத்துக்கள் அடங்கிய இக்கவிதை இதுவரை வெளிவராமலிருந்தது. விந்தையிலும் விந்தையே!

[விலை ரூ. 1—50]

கிடைக்குமிடம் :

சக்தி காரியாலயம்,
ஆயிரம் விளக்கு, சென்னை-6.

★★★

உலக சமாதானம்

ஆசிரியர்: ஜி. வி. வேதாந்திரி

கூடுவாஞ்சேரியிலிருந்து வெளியாகியிருக்கும் இந்தப் புத்தகத்தைவிட; இதைத் தீட்டிய ஆசிரியரது 'பரந்த மனப்பான்மை'யையும் 'பெரு நோக்கத்தை'யும்தான் பாராட்ட வேண்டியிருக்கிறது. ஆசிரியரே கவிதை எழுதி; அதற்கு விளக்கமும் தந்திருக்கிறார். இது தேவையற்றது; ஏனெனில் விளக்கமெதுவும் தேவையில்லாமலேயே அவை தங்களது உண்மை சொரூபத்தைக் காட்டுகின்றன.

புத்தகத்தைப் பார்த்ததும் காலம் அதிவேகமாக முன்னேறிக்கொண்டிருக்கும் இந்தச் சமயம்; இவ்வளவு அதிக விலையில் இதுமாதிரியான 'உலக சமாதானம்' தேவைதானா—என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

[விலை ரூ. 5]

கிடைக்குமிடம்:

அன்பொளிப் பதிப்பகம், கூடுவாஞ்சேரி.



காலஞ் சென்ற நாதசுர வித்வான் திருவாடுதுறை 'கக்காயி' டி. என். ஆர். நடராச சுந்திரம் அவர்களின் செல்வி பிரேமா வதிக்கும், மேலூர் திரு. எம். வேலாயுதம் அவர்களின் புதல்வர் இராமமூர்த்தி பி. ஏ., அவர்களுக்கும் சென்ற 28—4—57 அன்று திருமணம் சிறப்புற நடைபெற்றது.

★ ★ ★

★ ★ ★

10-6-57 "வெள்ளி வீதி"யில்

மு. கருணாநிதியின்

'என்னைப்பற்றி...'யுடன்,

சபாஷ்! எம். ஜி. ஆர். !

"ட்ரெய்லர்" (அரசிளங்குமரி)

" விசித்திரப் பிறவிகள் "

கேமிரா அறிமுகம் (ஜெமினி கணேசன்)

இன்னும் பல

வெள்ளி வீதி,
12-பி., ராமானுஜம் செட்டித் தெரு,
சென்னை 6.

பிறைவானம் ..

✻ 11-ம் பக்கத் தொடர்ச்சி

பாய்ந்து கொண்டே இருந்தன. 'ஊரை விட்டு என்ன; இந்த உலகத்தை விட்டே ஓடிவிடுகிறேன்!' என்று அவள் புலம்பினாள். 'அதற்கு வேண்டுமானால் என்னால் உதவி செய்ய முடியும்' என்று சொல்லும் பாவனையில் திடீரென்று மறுநாளே அவளைச் 'சட்'டென்று பற்றிக்கொண்டது, நாடெங்கும் காற்றிலே காற்றை விட வேகமாகப் பரவிவரும் 'விஷக் காய்ச்சல்'!

"காமாப்பாட்டி விஷ சுரத்தால் படுத்துவிட்டாள்!...இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட வேலுத்தம்பி தன்னையும் மீறி "ஐயையோ; பாட்டி!" என்று அலறிவிட்டான். தலைமேலே கூர் நகங்கள் விரித்து காட்டுக் கழுகு வட்டமிட— திரும்பும் திசை எல்லாம் நச்சுப் பாம்புகள் படமெடுத்து ஆட— இடையிலே சிக்கித் தவிக்கும் சிறுவனின் நிலையிலே நின்று தத்தளித்தான் வேலுத் தம்பி!

"உண்மைதான். அவன் வெளியிலேகூட வரமுடியாதபடி 'வேலி' போட்டிருந்தார் கருணாகரர். வேலுத்தம்பி என்ன செய்வான்? அவன் தாமரை இலைத் தண்ணீராகத் தவித்துக் கொண்டிருந்த போது கருணாகரர் வாழ்நாளிலேயே முதல் முறையாக களிப்பின் சிகரத்திற்கு ஏறிவிட்டார். 'கிழவி தொலைந்தாள். பாசம், அன்பு, அசைக்க முடியாத விசித்திர நேசம்—என்றெல்லாம் புலம்பினாளே—எல்லாம் தூள் தூளாகப் போகிறது. இனி எங்கே அவள் 'தலையெடுக்க'ப் போகிறாள்? என் மகனின் 'தலை தப்பப் போகிறது!' என்று எண்ணி எண்ணி மனம் குளிர்ந்தார்.

"ஒருநாள்...அன்று பாட்டிக்கு உடல்நிலை மிகவும் மோசமாகிவிட்டது என்று பேசிக் கொண்டார்கள். கருணாகரர் இந்தக் களிப்பு நிறைந்த செய்தியைத் தன் மகனிடம் சொல்லலாம் என்றுநினைத்து அவனது அறையின் கதவைத் திறந்தார். மறுகணம் "ஐயையோ!" என்று அலறிவிட்டார். என்ன என்று கேட்கிறீர்களா? 'சிறை' காலியாக இருந்தது; குற்றம் ஏதும் புரியாத அந்தக் கைதி தப்பியோடிவிட்டான்! கருணாகரரின் முகத்தில் கோபம் கோரத் தாண்டவம் புரிந்தது. 'எனக்குப் பிறந்தானா அவன்; என்ன செய்கிறேன் பார் அவனை!' என்று மீசை முறுக்கி, வேக நடை முடுக்கி, கிழவியின் குடில் நோக்கி ஓடினார். அவர் எதிர்பார்த்து வீண் போகவில்லை. ஈரநெஞ்சம் ஈர நெஞ்சத்தைத்தான் நாடியிருந்தது.

"எலும்பும் தோலுமாய் மரணத்துடன் போராடிக் கொண்டிருந்த அந்தக் காமாப் பாட்டியின் அருகிலே உட்கார்ந்து 'பாட்டி; பாட்டி!' என்று புலம்பிக் கொண்டிருந்தான் வேலுத்தம்பி. இமை திறக்கவும், பார்க்கவும், பேசவும் இயலாது நச்சு நோயின் வயப்பட்டிருந்த பாட்டியின் ஒட்டி உலர்ந்து சட்டம்போல் இருந்த கைகள் மட்டும் வேலுத்தம்பியின் கழுத்தைச் சுற்றி பாசத்தோடு பிணைந்து கிடந்தன!

"இந்தக் காட்சியைக் கண்ட பின்னும் கருணாகரரின் சீமான் உள்ளம் தாங்குமா? அவரது இரும்பு நெஞ்சத்தில் கொஞ்ச நஞ்சமிருந்த கனிவும் கோபக் காற்றிலே பஞ்சுபோல் பறந்து—சிதைந்து—மறைந்தது! "டேய் ராஸ்கல்! இங்கெங்கடா வந்தேநீ? இழவெடுத்த வீட்டிலே என்னடா வேலை உனக்கு?" என்று சீறிப் பாய்ந்தார். "காலை முதல் இங்குதானப்பா இருக்கிறேன்! இதோ பாருங்கள்...பாட்டி சாகக் கிடக்கிறார்கள் அப்பா!" என்றான் வேலுத்தம்பி! அவன் விழிகளிலிருந்து அருவியெனப் பெருகிய கண்ணீரால்கூட, கருணாகரரின் உள்ளத்திலே படிந்து கிடந்த அழுக்கைத் துடைக்க முடியவில்லையே!

"கருணாகரரின் முரட்டுக் கரம் வேலுத்தம்பியின் கன்னத்திலே பாய்ந்தது. மாறிமாறி விழுந்த அறைகளைக் கூடப் பொருட்படுத்தாது பாட்டியின் உடல்மீது விழுந்து புரண்டான் வேலுத்தம்பி! கருணாகரர் தன் கைவரிசையைக் காட்டியபின், வேலுத்தம்பியின் அலறலையும் பொருட்படுத்தாது அவனைத் 'தரதர' வென்று இழுத்துக்கொண்டு தன் வீட்டை அடைந்தார்.

"அந்தக் கணத்தில் அவனுக்கும் அந்தப் பாட்டிக்கும் இடையிலே விழுந்த பள்ளம்தான், இன்று நிரந்தரப் பள்ளமாக மாறிவிட்டது நண்பரே!...'என் மகனைப் பார்க்காதே! பேசாதே! சிரிக்காதே! அப்பம் தராதே! அன்பு காட்டாதே! அணைத்து மகிழாதே!' என்று கருணாகரரின் செல்வாக்கும், அகங்கார அதிகாரமும் அந்த ஏழைப் பாட்டியைத் தான் தடைபடுத்த முடியுமே தவிர—'என் மகனைத் நெருங்காதே! தீண்டாதே!' என்று 'அணு'விலும் சிறிய தொடர்பு கிடைத்தாலும் மாற்றாரை 'கப்' பென்று பற்றிக் கொள்ளும் விஷக் காய்ச்சலையுமா கட்டுப்படுத்திவிட முடியும்? நீரிலே கலந்து - காற்றிலே மிதந்து - நாடு விட்டு நாடு பயணம் செய்து- 'நான் எங்கெங்கும் செல்வேன்; இச்சைபோல் செல்வேன், நசுக்கிவிட முடியாது என்னை' என்று நாட்டின் காவலருக்கும்; மருத்துவர்களுக்கும் 'சவால்' விடும் அந்த விபரீத நோய், 'ஐயோ பாவம்; அவன் கருணாகரரின் மகனாயிற்றே; விட்டுவிடுவோம்!' என்று விலகிச்செல்லும்? பாட்டியின் பக்கத்திலே இருந்துவிட்டு வந்தவனாயிற்றே அவன்; அவளது உடம்பின் மேலேயே புரண்டவனாயிற்றே; விட்டு விடுமா? அன்று இரவே அவனை இறுகப் பிடித்துக்கொண்டது அந்நோய்!

"பிஞ்சு உடல்; சுரக் கொடுமைத் தாங்க முடியாத பருவம்; எத்தனை மருத்துவர் வந்தென்ன? எத்துணை சிகிச்சை செய்துதான் என்ன? பாவம்; வேலுத்தம்பி விடைபெற்றுச் சென்றுவிட்டான் இவ்வுலகத்தைவிட்டே!

"அச் செய்தி கேள்விப்பட்டது முதல் பைத்தியம் பிடித்த உருவம் ஒன்று ஊரிலே திரிந்துகொண்டிருக்கிறதே தெரியுமா உங்களுக்கு?..."

"யார்? கருணாகரரா? அவரா பைத்தியம் பிடித்து அலைகிறார்?" என்றேன் நான் பதட்டத்துடன்.

"இல்லை ஐயா! அந்தப் பாழடைந்த குடிலின் கிழவிதான்! அவள்தான் பைத்தியக்காரியாக அலைகிறாள்! வியாதியிலிருந்து அவள் எழுந்துவிட்டாள்; வேலுத்தம்பியை தன் பாசத்துக்குப் பலியாக்கிவிட்டு!"

> குழந்தைகளின் இருதயத்திலே பாசம் பிறந்து விட்டால் எத்தகைய பிரிவினைப் போதனைகளும் என்ன செய்ய முடியும் என்று நினைக்கிறீர்கள்?

—என்று நண்பர் முதலில் கேட்ட கேள்வி என் மனக்கண் முன் மீண்டும் வந்து நின்றது.

எனக்குப் பதில் கிடைத்தது. இவைகளுக்கெல்லாம் ஒரே விடை—சிக்கலற்ற நேரிய விடை—பாச உணர்ச்சியும் பண்பாடும் கொண்டவர்கள் அத்தனை பேரும் ஒப்புக்கொண்டே தீர வேண்டிய ஒரே விடை—குழந்தைகளுக்குத் தான் இதயமுண்டு!

தவறானதல்லவே இது; நீங்களும் ஒப்புகிறீர்களல்லவா?

— சொர்ணம்.

குழந்தைகளுக்குத்தான் இதயமுண்டு!

“ஆண்களுக்கு இதயமில்லை; பெண்களுக்கு இதயமில்லை—என்றெல்லாம் ‘வர்க்கப் போராட்டம்’ நடத்திக் கொண்டிருக்கிறீர்களே; என்னைக் கேட்டால் சொல்வேன்; இதயங்கள் என்னவோ குழந்தைகளுக்குத்தான் இருக்கின்றன! நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?...”

நான் என்ன நினைப்பது? குழந்தைகளுக்கு இதயமுண்டு; இதயத்திலே ஈரமுமுண்டு — இதை நன்குணர்ந்தவன் நான். ஆனால் நேரிடையாக ஒப்புக் கொண்டுவிட்டால், என்னைத் தேடிவந்த நண்பரின் வாயைக் கிளற முடியாதே! ஏனெனில் அவர் வாயைத் திறந்தால் மூடவே மாட்டார். தான் என்னவோ முத்துக்களையே உதிர்த்துக் கொண்டிருப்பதாக அவர் நினைத்துக் கொள்வார். பல நேரங்களில் சகிக்க முடியாது போய்விட்டாலும், சில சமயங்களில் பொழுது நல்ல முறையிலே போகும்படி ஏதேனும் பேசுவார். நான் அத்தகைய நல்ல நேரம் வாய்க்காதா என்ற நினைப்பில் பேச ஆரம்பித்தேன்.

“குழந்தைகளுக்கு இதயமா? அது நிச்சயம் இருக்கிறது! ஆனால் எது நல்லது; கெட்டது என்று பகிர்ந்துணரும் பண்பு இருக்காதே! ‘மரத்தடியில் புதையலிருக்கிறதுடா ராசா; அது சொர்க்கத்திலிருந்து பாட்டி அனுப்பும் சொத்து; கோட்டு கோட்டாக ஆகாயத்திலே பறந்துவந்து மண்ணுக்குள்ளே புதைந்து கொண்டிருக்கிறது கண்ணு!...உனக்கு வேணுமா?...உம்...?...” என்று நீட்டி மடக்கிக் கேட்டால், ‘ஆ, அப்படியா?’ என்று வாயைப் பிளக்கும். ‘பெண் தெய்வமாம் உமா பிராட்டியாரை உனக்குத் தெரியுமா தம்பி? அந்தத் தேவியாரின் உடலிலே பாதி பரமசிவக் கடவுளாம்; ஈருடலும் ஒருயிரும் என்பார்களே; ஆனால் இங்கே பார்த்தாயா ‘ஈருயிர் ஒருடலாக’ இருக்கிறது! அவர்களை வணங்குடா கண்ணு!’ என்று புளுகினால், ‘சிவ, சிவா’ என்று ‘கன்னத்தில் போட்டு’க் கொள்ளும் அந்தச் சிசுக்கள்!...‘பார்த்தாயா... அவன்தான் பறையன்: பள்ளன்—அவன் தோட்டி—அதோ, அவன்தான் குறவன்—அவர்களை எல்லாம் தொடவே கூடாது; பாவம்!’ என்று போதித்தால், ‘ஐயையோ! அப்படியா?’ என்று ஏதோ நச்சுப் பாம்பைக்கண்டுவிட்டதைப்போல அவர்களைக் கண்டு நடுங்கும்...”

“நிறுத்துங்கள்...”—என்று இடைமறித்தார் நண்பர்.

“தப்பு...தப்பு!...குழந்தைகளின் இதயத்திலே பாசம் பிறந்துவிட்டால் இத்தகைய பிரிவினைப் போதனைகள் என்ன செய்ய முடியும் என்று நினைக்கிறீர்கள்? கருணாகரர் வீட்டுப் பிள்ளை வேலுத்தம்பியை உங்களுக்குத் தெரியுமா?”

“தெரியும்!”

“அவன் எப்படிச் செத்துப் போனான் என்பது தெரியுமா?”

“என்ன? என்ன? செத்துப் போய் விட்டானா? அதே எனக்குத் தெரியாதே! எப்படி? எப்படி?... தயவு செய்து சொல்லுங்கள்!” என்று அவசரப்படுத்தினேன் நான்.

வேலுத்தம்பியை நான் பார்த்திருக்கிறேன். குறுகுறுத்த விழிகளும், துருதுருவென்று ஏதேனும் செய்துகொண்டேயிருக்கும் பண்பையும் கண்டு நான் மகிழ்ந்திருக்கிறேன். அவன் முகத்திலே தோன்றிய கவர்ச்சி எல்லோரையும் அவன்பால் ஈர்க்கத்தான் செய்யும். அந்தக் குழந்தை—வளர்ந்து, வாழ்ந்து, வகை காணவேண்டிய அன்புத் தம்பி சாவிலே வீழ்ந்து விட்டான் என்பதறிந்து நான் பதறிப் போனேன்!

“சொல்லுகிறேன், சொல்லுகிறேன்; அந்தச் சோகக் கதையை சொல்லித்தானே அழவேண்டியிருக்கிறது!...‘எலிமெண்டரி’ பள்ளிக்கூடம் இருக்கிறதெருக்கோடியிலே ஒரு பாழடைந்த வீடு இருக்கிறதே; தெரியுமா உங்களுக்கு? அங்கே ஒரு கிழவிகூட...”

“தெரியும்; தெரியும்! அந்தப் பாட்டியின் பேருகூட காமாட்சி என்பாங்க...தெருவிலே அப்பம், வடை போன்ற ஏதேதோ விற்றுக் கொண்டு...”

“ஆமாம்; ஆனால் ‘காமாப்பாட்டி’ என்றுதான் அவளை எல்லோரும் அழைப்பார்கள். அந்தக் காமாப் பாட்டியின் பாழடைந்த குடில்தான் ஐயா, வேலுத்தம்பியைக் காவு கொண்ட பலிபீடம்!

“ஆரம்ப முதலே சொன்னால்தான் உங்களுக்குத் தெரியும்... காமாப்பாட்டி இந்த ஊருக்கு எப்படி வந்தாள்; எங்கிருந்து வந்தாள்; என்று யாருக்கும் தெரியாது. ஏதோ வந்தாள்; தெருக்கடை வைத்தாள்; வாழ்கிறாள்; என்றுதான் மாற்றாரைப்பற்றிக் கவலைப் படாத எல்லோருமே எண்ணிக் கொண்டிருந்தார்கள். ஊரிலே அவள் யாரிடமும் நெருங்கிப் பழகுவதில்லை. ஆனால் வேலுத்தம்பிக்கும் அவளுக்கும்—அந்தக் கிழவிக்கும் குழவிக்கும் ஏற்பட்டுவிட்ட பிரிக்க முடியாத உறவை—அசைக்க முடியாத பாலத்தைக் கண்டு நான் வியந்திருக்கிறேன். ஆனால் கருணாகரரோ விழிகள் சிவக்க வேலுத்தம்பியின் மேல் பாய்ந்திருக்கிறார். பாவம், பாசம் சுரந்துவிட்ட நெஞ்சிலே கெட்ட பயமுறுத்தல் எதுவுமே செய்ய முடியாது என்பதை அவர் உணரவேயில்லை!

“புத்தகப் பை தோளிலே ஊசலாட பள்ளிக்குச் செல்லும் போதே ஒரு முறை அந்தப் பாட்டியின் முத்தத்தைப் பெறாவிட்டால் வேலுத்தம்பி துடித்து விடுவான். ‘கண்ணு; ஒழுங்கா படிச்சுட்டு வாம்மா!’ என்று அன்போடு அவளது உச்சி நெற்றியிலே முத்தமிட்டு, அப்பத்தைப் பிட்டு வாயில் ஊட்டி, அவனை வழியனுப்பி வைக்காவிட்டால் காமாப் பாட்டியும் பதறிப் போவாள். பள்ளிவிட்டுத் திரும்பும்போதும் சற்று நேரம் பாட்டியின் மடியில் தலை வைத்துப் படுத்து அன்று கற்ற பாடத்தை ஒப்பித்து விட்டுத்தான் வீடு திரும்புவான் அந்தக் குழந்தை!

“பாட்டிக்கு ஒரு மகன் இருந்தானாம், பல ஆண்டுகளுக்கு முன்பு; வேலுத்தம்பியைப் போலவே இருந்தானாம்; அதே வயதில் இறந்தும் போய் விட்டானாம்; வேலுத்தம்பியைப் பார்த்ததும் அவனது நினைவு ஏற்பட்டு விட்டதாம் பாட்டிக்கு; ஆகவேதான் அத்தகைய பாசத்தையும் பரிவையும் அவன்பால் அவள் வைத்திருந்தாள் போலும்!

“கருணாகரரைத்தான் உங்களுக்குத் தெரியுமே, ஊரிலே செல்வாக்கு மிக்கவர். ஆனால் அவர் வேலுத்தம்பியின் போக்கை வெறுத்தார். ‘அந்தக் கிழவி யாரோ: எவளோ! அவளிடம் அப்பம் தின்கிறானே இந்த அசடு! பாவி, அப்பத்திலே விஷம் வைத்துக் கொன்றாலும் கொன்று விடுவாளே அவள்!’ என்று இரைந்தார். ஆனால்......மறுகணமே வேலுத் தம்பியின் கால்கள் அவனை யறியாமல் கிழவியின் குடிசையை நாடும்; ‘பாட்டி’ என்று அன்பொழுக அழைத்துக் கொண்டு ஓடி வரும் சிசுவை வாரியணைத்து மகிழ்வாள் பாட்டி!

“என்னதான் வழி இந்த உறவைத் துண்டிப்பதற்கு என்று நீண்ட யோசனைக்குப் பிறகு ஒரு நாள் கருணாகரர் அந்தக் கிழவியிடமே சென்றார். ‘இனி என் மகனுக்கு அப்பம் தரக்கூடாது!’ என்று ஆணையிட்டார். ‘அவன் அப்பத்துக்காக வரவில்லையே! உங்கள் காலில் விழுகிறேன். அன்போடு வரும் அந்தக் குழந்தைக்குத் தடை போடாதீர்கள்! அதனால் உங்களுக்கு நஷ்டமேதுமில்லை ஐயா!’ என்று காலைப்பிடித்தாள் கிழவி. ‘மரியாதையாகச் சொல்லுகிறேன்; என் கோபத்திற்குப் பலியாவதற்கு முன் இந்த ஊரை விட்டே ஓடிவிடு!’ என்று கோபத்தால் ‘கர்ஜனை’ புரிந்துவிட்டு வேகமாகச் சென்றுவிட்டார் கருணாகரர். பின்னால் எழும்பிய பாட்டியின் விம்மல் அழுகுரல் அவர் செவிகளில் படவே இல்லை!

“ஊரைவிட்டே ஓடிவிடு! ஊரைவிட்டே ஓடிவிடு! — இந்த தீயச் சொற்கள் காமாப்பாட்டியின் காதுகளிலே ஈட்டிகள் போல்

✻ 10-ம் பக்கம் பார்க்க

ஓர் இரவில்...

முன்னிரவு 10 மணிக்கு...

“டேய், யாருடா அவன் படுத்திருக்கிறது?...”

“...........”

“டேய் கழுதை! பிச்சைக்கார ராஸ்கல்! திருட்டு நாயே... எழுந்திருடா...”

“சாமி!...சாமி!...அடிக்காதிங்க சாமி!...”

“பின்னே இங்கே என்னடா தூக்கம்? என்ன; உங்கப்பன் வீட்டுப் பார்க்கா இது? யார் நீ? எதைத் திருடிக்கிட்டுப் போக வந்தே?...”

“ஐயையோ! அப்படி எல்லாம் பழி சொல்லாதீங்க ஐயா! என்னைப் பாருங்கள்; பசியால்—பல நாள் பட்டினியால்—வியாதியின் கொடுமையால்—நிலைகுலைந்து கிடக்கும் இந்தச் சிறுவனைப் பாருங்களய்யா! என்னைப் பார்த்தால் திருடன் போலவா தெரிகிறது?”

“வேஷம்!...வேஷம்!...எல்லாம் வேஷம்!... ஓடுடா கழுதை இதைவிட்டு!...”



“ஐயையோ! நிற்கவும் முடியவில்லையேசாமி! இந்த அனாதையின் மேல் கொஞ்சம் இரக்கம் காட்டுங்க எசமான்!...”

“சீ...சீ...சொன்னதைச் செய்யுடா மூதேவி...”

“ஐயைய்யோ!...அடிக்காதீங்க சாமி; அடிக்காதீங்க சாமி!...ஆ...ஐயோ!...ஐயோ!...”

“கத்தாதே!...கத்தினால் உயிரையே வாங்கிடுவேன்!...ம்...ஓடு...ஓடு...ஓடு!...”

“போறேன்...போறேன்!...கொல்லாதீங்க சாமி!...ஐயையோ! அப்பா...அம்மா!...”

“தொலைந்தான் கழுதை! இந்தப் பசங்களையெல்லாம் சுட்டுக் கொல்லனும்; இரவெல்லாம் நம்ப பிராணனை வாங்குறானுங்க!...

பின்னிரவு 3 மணிக்கு...

“டேய், யாருடா அவன் இங்கே வந்து படுத்திருக்கிறது?... ஓகோ...நீயேதான் மறுபடியும் வந்துட்டியா?...”

“...........”

“டேய் கழுதை! பிச்சைக்கார ராஸ்கல்! திருட்டு நாயே... எழுந்திருடா!...”

“...........”

“என்னது; நான் சொல்லிக் கிட்டேயிருக்கேன்; நீ பாட்டுக்குப் படுத்துக்கிட்டே யிருக்கியே! உங்கப்பன் வீட்டுப் பார்க்கா இது...?”

“...........”

“என்னது? என்னடா பேசாம இருக்கே...இதோ பாரு, உருட்டிக் கீழே தள்ளுறேன்...”

“...........”

“ஆ!...ஐயையோ!...என்னது! பிணம்; பிணம்! பயல் செத்துத் தொலைஞ்சிட்டான்!...அட சனியனே! இவனை ‘எடுக்கறதுக்கு’ ஏற்பாடு செய்யணுமே!...அட எழவே! நீங்களெல்லாம் இருந்தும் தொல்லைதான்; செத்தும் தொல்லைதண்டா பாவிகளே!

எழுத்தாணி

சித்திர வேலன், பெங்களூர் கண்டோன்மேண்ட்

(?) ஜாதிப் பெயர்கள் அழிவது பற்றி தாங்கள் என்ன கருதுகிறீர்கள்? ஏட்டல் அழிப்புப் போராட்டம் பற்றி விளக்குவீரா?

ஜாதிப் பெயர்கள் இருக்க வேண்டுமென்று எந்த முற்போக்குவாதியும் கருதமாட்டான். ஜாதிகளின் தலைமை பீடத்தை ஏற்றிருக்கும் "பிராமணாள்" என்பது ஒழிவதிலும் நமக்கு எந்த விதக் கருத்து வேற்றுமையுமில்லை. "பிராமணாளை" அழிக்கப் போராட்டம் நடத்துகிறவர்கள், தேர்தல் நேரத்தில் கிருஷ்ணமாச்சாரியார் போன்றவர்களை ஆதரித்த போதே—அப்படி ஆதரிப்பதற்கு நிபந்தனையாக ஜாதிப் பெயர் ஒழிவதற்கு அந்தப் பார்ப்பன அபேட்சகர்கள் ஆதரவு தரவேண்டுமென்று கேட்டிருக்கலாம். ஓட்டு

தருவதற்கு "பிராமணாள்" பரவாயில்லை; ஓட்டலுக்கு மட்டும் "பிராமணாள்" கூடாது என்பது முரண்பட்ட வாதம்! நிதிமந்திரியாகப் பார்ப்பனரை உட்கார வைத்துவிட்டு, அவருக்கும் அவர் போட்ட வரிகளுக்கும் "லாலி" பாடிக் கொண்டே "பிராமணாள் ஒழிப்பு" போராட்டம் நடத்துவது; தும்பைவிட்டுவாலைப் பிடிப்பது போலாகும் என்பதே நமது கருத்து.

கே. சுந்தரமூர்த்தி, தஞ்சாவூர்

(?) பார்ப்பனர்கள் அனைவருமே திருந்தி விடுவார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

அனைவருமே திருந்தி விடுவார்கள் என்று நம்பவுமில்லை; அவர்களின் குறுகிய நோக்கையும், கொடுமையான சூழ்ச்சிகளையும் குறைத்துக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கவுமில்லை. வளர்ந்து வரும் புதிய இளைஞர் சமுதாயத்தில் பெரும் பகுதியினர் நம்மைப்பற்றித் தெளிவாகப் புரிந்துகொள்ளும் ஆற்றலுடையோர் என்றும், அவர்கள் அறவழி நின்று புதிய சமுதாயம் எழுந்திடத் துணை புரிவர் என்றும் அறிகுறிகள் தென்படுகின்றன. அந்த அளவிலேயேதான் நாம் அந்த முற்போக்கு இளைஞர்களை வரவேற்கிறோம். கலையுலகிலும், பத்திரிகை உலகிலும் கயமைத்தனம்குடிகொண்ட ஆரியப் பண்பினர் சிலர் கடு நஞ்சு, உமிழ்ந்து வருவதை நாம் அறியாமலில்லை. அவர்களிலும் நல்லோர்—நாடு காக்க வல்லோர் தோன்றுவதில், தோன்றியவர் நம் அணி வகுப்பில் சேருவதில் தடையேதும் இருக்கவில்லை.

வி. கே. மணிவர்மன், கோவை

(?) அண்ணாதுரை, நீங்கள் மற்றும் சிலர் சினிமாவுக்குக் கதை எழுதுவதாலேயே சினிமா ஒழியக்கூடாது என்று வாதிடுகிறீர்கள் என்கிறேன் நான், உண்மைதானா?

உண்மை என்றே வைத்துக் கொள்ளுவோமே; அதனால் என்ன? சினிமாவினால் ஏற்படுகிற குறைபாடுகளை எடுத்துரைத்து ஒழிய வேண்டுவதற்கான காரணங்களைச் சொன்னால் நாங்களும் ஒப்புக் கொள்கிறோம். சினிமாவினால் ஆபாசம் பெருகுகிறது; அதனால் அதை ஒழிக்கவேண்டும் என்கிறார்கள். சில பத்திரிகைகள் ஆபாசச் செய்திகளை வெளியிட்டே பிழைப்பு நடத்துகின்றன என்பதற்காக பத்திரிகைத் தொழிலுக்கே தடை போடுவது சரியா? சினிமாவினால் வயோதிகருக்கும் காதல் உணர்ச்சிகள் ஏற்படுகின்றன என்று பெரியார் கண்டிக்கிறார். சினிமாவே பிடிக்காத அவரையே அந்த உணர்ச்சி லேசில் விடவில்லையே! சினிமாவே தோன்றாத காலத்தில் கொலை, கொள்ளைகள், குற்றங்கள் நடைபெறவில்லையா? விபச்சாரம் தெய்வீக மெருகோடு நடத்தப் பட்டது சினிமா தோன்றாத அந்தக் காலத்திலேதானே?

இதை யெல்லாம் சொன்னால், இவர்கள் கதை எழுதுகிறார்கள்—அதனால் சினிமாவை ஆதரிக்கிறார்கள்—என்று கூறுவதா? அப்படியானால் கதை எழுத, நடிக்க, எப்படியோ ஒட்டிக் கொள்ள சந்தர்ப்பம் கிடைக்காதவர்கள்தான் சினிமாவைத் திட்டுகிறார்கள் என்பதை நீர் ஒப்புக் கொண்டு தீர வேண்டுமே!

சினிமா, விஞ்ஞானத்தின் மூலம் வளருகின்ற கலை!

அழகான பளிங்குக் கல்! அதைக் கொண்டு காந்தியின் சிலை செய்வதா; அல்லது கோட்சேயின் [illegible] செய்வதா என்பதை [illegible] வாதமாயிருக்க வேண்டு[illegible]ரா, பளிங்குக் கல்லையே உடைத்துவிட வேண்டுமென்பது பகுத்தறிவுக்குச் சிறிதும் பொருந்தாது.

எஸ். வீரப்பன், காரைக்குடி

(?) மறுமலர்ச்சி ஓவியம் என்ற பெயரால் சில படங்கள் பிரமாதமான வர்ணங்களில் மிகப் பெரிய பத்திரிகைகளில் வெளிவருகின்றனவே; அதுபற்றி உமது கருத்தென்ன?

தெனாலிராமனைப் பற்றி ஒரு கதை சொல்லுவார்கள்; அவனிடம் மன்னர் ஒரு மாளிகையைக் கொடுத்து, நிறைய பொன்னையும் தந்து, அந்த இடத்தை அழகான ஓவியக் கூடம் ஆக்க வேண்டும் என்றாராம். குறிப்பிட்ட நாளில் ஓவியக் கூடம் தயாராக வேண்டுமென்று மன்னர் கட்டளை. ராமனோ, பொன்னைப் பெற்று செலவு செய்துவிட்டு ஊர் சுற்றித் திரும்பினான். ராமனிடம் மன்னர் மறுநாள் ஓவிய மன்றம் பார்க்க வருவதாகச் செய்தி அனுப்பினார். ராமன் பயந்தான். மன்னருக்கு என்ன பதில் கூறுவதென்று புரியவில்லை. திடீரென ஒரு யோசனை! தொட்டியில் வர்ணத்தைக் கரைத்தான். துடைப்பக் கட்டையால் வர்ணத்தைத் தோய்த்து சுவர்களில் அடித்து வைத்தான். மறுநாள் மன்னர் வந்தார். சுவற்றில் உள்ள துடைப்பக்கட்டைக் கோடுகளைக் கண்டு "இவை என்ன?" என வினவினார். "குதிரையின் வால்கள்" என்றான். "குதிரைஎங்கே?" எனக் கேட்டார். "குதிரை அந்தப் பக்கமிருக்கிறது. இது-பின்பக்கம்" என்றான்; இப்படி ஒரு வேடிக்கைக் கதை உண்டு! துடைப்பக் கட்டையால் எழுதப்பட்ட குதிரை வால்களுக்கும், தூரிகையால் எழுதப்படும் மூன்றிலும் மறுமலர்ச்சி கொண்ட ஓவியங்களுக்கும் அதிக வேறுபாடில்லை யென்பதே எமது கருத்து.

காட்டுக் கதை!

ஒரு காட்டில் வேங்கையொன்று துள்ளித் திரியும் புள்ளிமான்களை அடித்து வீழ்த்தி வயிறு புடைக்கத் தின்றது. அதன் நாக்கெல்லாம் ரத்தம் சொட்டியது. வயிறோ சால்போலப் புடைத்துவிட்டது நடக்க முடியாமல் திணறிய வேங்கை ஒரு பாறையின்மீது உட்கார்ந்து கொண்டு;

"ஆகோ வாருங்கள்; ஆரண்யத்தில் வாழும் புள்ளி மான் குட்டிகளே! நீங்கள் எல்லாம் எங்கள் புலிக் குட்டிகளை யெல்லாம் அடித்துச் சாப்பிடுவதாகக் கேள்விப்படுகிறேன். அது மறநெறியாகும். அதைவிட்டு அறவழியில் நடப்பீராக!"—

என்று உபதேசம் செய்ததாம். இது நடக்காத கட்டுக் கதை யென்பீர்கள்; சரி! பஞ்ச தந்திரக் கதையையா சொல்ல வருகிறாய்—என்று கேட்பீர்கள். அப்படியானால் இதோ ஒரு உண்மையான கதை கூறுகிறேன்; அதையாவது கேளுங்கள்!

"தி. மு. கழகத்தார் அரசியலில் உள்ள கருத்து வேறுபாடுகளைப் பலாத்கார மூலமாகத் தீர்த்துக் கொள்ள எண்ணுவது தவறாகும்"

என்ற அறிவுரையை ஒருவர் மதுரை மாநகரில் வழங்கியிருக்கிறார். தி. மு. கழகத்தவர் பலாத்கார வழியில் சென்று தங்கள் கருத்து வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்கிறார்களாம்! வேடிக்கையாக இல்லை இது! இப்படிப் பேசியவர் யார் தெரியுமா? கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் ராமமூர்த்தி அவர்கள்தான்!

இப்போதாவது நான் சொன்ன காட்டுக் கதையை கட்டுக் கதை யென்று கூறமாட்டீர்கள்; அல்லவா?

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட்ரோடு, சென்னை-6, தமிழ்நாடு